ചരിത്ര ദീപിക

ലക്കം 1 വർഷം 4

ജനുവരി 1958

DIGITIZED

JL
Rm 21193, 1947
1947.1.41
199822

ஹிதபாஷிணி

தொகுதி 1 | ஸர்வஜித்வருஷ தைமீ | 1948 ஜனவரி | பகுதி 4

हितभाषिणी ॥ HITHABHASHINI

ஆசிரியர்: R. முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்,
1835/3, மேலவீதி, தஞ்சை.

5 அணா.

SWAMI SIVANANDA - RIKHIKESH.

It gives me the greatest delight to peruse this Journal Hithabhashini, true to its name, spreads the message of Divine Life. What can be more conducive to the good of humanity than the spreads of Vedic knowledgs and the propagation of Sanatana Dharma? India has come to her own; it is high time, therefore, that her message of Divine Life is spread far and wide. It is urgently necessary to awaken our own countrymen to the grandeur of our own heritage Hithabhasini is carrying on this work in the South as vigorously as "Divine Life" is doing in the country, and in the West, too. A very useful section in the former is the Sanskrit Section. Spread of a knowledge of Sanskrit will pave the way for its becoming the *lingua franca* of our Motherland. May the Journal be endowed with all success by the Almighty.

Rikhikesh, }
9—1—48. }

Thy own Self
SIVANANDA.

Divan Bahadur K. S. Ramaswami Sastrigal Avl.

Retd. District Judge Royapettah; Madras.

I saw your excellent monthly The monthly is full of valuable matter and excellently got up The Scriptures teach us to combine in our speech Satya and Priya and Hita and your magazine carries out that command in a laudable and noble measure I wish it every success.

K. S. RAMASWAMI SASTRI.

"ஹிதபாஷிணி" ஆயுள் மெம்பர்கள்.

23 ஸ்ரீ T. R. கிருஷ்ணஜோஸி, வெங்கடேசப்பெருமாள் கோயில் கீழவீதி, தஞ்சை.

24 ஸ்ரீ N. அப்பாஸாமி அய்யர், திருப்பாற்கடல்தெரு, பண்ணுருட்டி.

FEB 1949
1
MADRAS

C. KUNHAN RAJA

UNIVERSITY OF MADRAS
TRIPLICANE

9th Jan. 1948.

स्वस्ति श्रीः

भवता प्रेषितं पत्रं मासस्य प्रथमे दिने ।
यथाकालमिहागत्य मम प्रीतिं ददौ पराम् ॥ (१)

पत्रस्य हितभाषिण्या विसृष्टं सञ्चिकाद्वयम् ।
उपलब्धं, सावहितं किंचिच्च पठितं मया ॥ (२)

सम्यग्द्रमिडभाषायां नैपुण्यं विद्यते न मे ।
तथाच संस्कृतग्रस्तो भाग एवादृतो मया ॥ (३)

विद्यन्ते संस्कृते प्रायेणाज्ञाताः पण्डितैरपि ।
ग्रन्था बहुतराः पुस्तकागारेषु निगूहिताः ॥ (४)

संस्कृताभिज्ञमिश्रैस्तु तेषां नामापि नश्रुतम् ।
महत्त्वं किमु वक्तव्यमत्र, धिग्दुर्दशामिमाम ॥ (५)

उपकारो महानेव भवताद्य विधीयते ।
प्रकाशनेनेदृशस्य पत्रस्य विदुषां नृणाम् ॥ (६)

द्रमिडस्य जनैः कैश्चित् संस्कृतेन विरोधिता ।
उच्चैरुद्घुष्यमाणाद्य श्रूयते ननु भूरिशः ॥ (७)

भाषाद्वयस्याप्येकस्मिन् पत्रे तस्मान्निवेशनम् ।
विशेषेणोचितमिव ममैतदवभासते ॥ (८)

आशंसे विजयं पूर्णममुष्मिन् भवदुद्यमे ।
द्रमिडं संस्कृतंचापि विलसेतामुभे चिरम् ॥ (९)

மொழிபெயர்ப்பு.

இந்த மாத முதல் தேதியன்று தாங்கள் அனுப்பிய "ஹித பாஷிணீ" என்ற பத்திரிகை எனக்குக்கிடைத்தது. அது எனக்கு மிகுந்த ப்ரீதியை உண்டுபண்ணிற்று. ஷை பத்திரிகையின் இரண்டு இதழ்களையும் கவனமாக படித்தேன். தமிழ் பாஷையில் எனக்கு மிகுந்த பயிற்சியில்லாததால் ஸம்ஸ்கிருத பகுதியை ஆதரவுடன் படித்தேன். பண்டிதர்கள் கூட அறியாத பல ஸம்ஸ்கிருத நூல்கள் புத்தகசாலைகளில் மறைந்து கிடக்கின்றன. ஸம்ஸ்கிருத பாஷையில் தேர்ச்சி இல்லாதவர்கள் அவற்றின் பெயரைக் கூட கேட்டதில்லை யென்றால் பெருமையை அறியவில்லை என்பதைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? ஆ! ஸம்ஸ்கிருதபாஷையின் தர்தசை அழியுமா? இப்படிப்பட்ட பத்திரிகை ஒன்றை வெளியிடுவதால் தங்கள் அறிஞர்களுக்கு பெரிய உபகாரம் செய்து வருகிறீர்கள் என்பதில் ஐயமில்லை. "ஸம்ஸ்கிருதத்திற்கும் தமிழிற்கும் மிகுந்த விரோதம்" என்று சிலர் இக்காலத்தில் கோஷித்து வருவதை நாம் கேட்கிறோம். ஆதலால், ஒரே பத்திரிகையில் மேற்கூறிய இரண்டு பாஷையிலும் விஷயங்களை வெளியிடுவது தற்காலத்தில் மிகவும் பொருத்தமானது என்று எனக்குத்தோன்றுகிறது. இந்த முயற்சியில் தாங்கள் பூர்ணமாக வெற்றியடையவேண்டுமென்று நான் ஆசி கூறுகிறேன். தமிழும், ஸம்ஸ்கிருதமும் சேர்ந்தே வெகுகாலம் பிரகாசிக்கவேண்டும்

ஸி. குன்ஹன் ராஜா.

பொருளடக்கம்.

1	காயத்ரியின் மஹிமை	3
2	புண்யகாலங்களும் அதன் விசேஷங்களும்.	7
3	ஸ்திரீ தர்மம்	9
4	போகி-பொங்கல்	12
5	ஸ்ரீ ஸ்வாமிநாதஸ்வாமீ கீர்த்தனம்	14
6	ராமாயண ரத்னப்ரகாசம்	17
7	கண்ணோய் அணுகா நெறிகள்	20
8	அகப்புறட்சி	22
9	After-life Insurance	23
10	தார்மிகச் செய்திகள்	25
11	Self Conquest	26
12	ஸம்ஸ்கிருத ஸம்பாஷணை	27
13	பாரதி விஜயம்	28
14	ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்தோத்ரம்	

199822
சென்னை-600 0
Rm 3|198,1947
84321-451

॥ श्रीः ॥

மங்களம்

भवकोदण्डदलनं भवबन्धविमोचनम् ।
दशकण्ठरिपुं वन्दे दशस्यन्दननन्दनम् ॥

4 3 3 3 4 3 4
பவகோதண்டதலனம் பவபந்த விமோசனம்

4 2 3 3 3
தசகண்டரிபும்வந்தே தசஸ்யந்தனநந்தனம்.

பரமசிவனுடைய வில்லை முறித்தவரும், ஸம்ஸாரபந்தத்தில் இருந்து விடுவிப்பவரும், ராவணனைக்கொன்றவருமான தசரத புத்ரனை ஸ்ரீராமனை வணங்குகிறேன்.

स्वस्त्यस्तु हितभाषिण्यै याविद्वत्स्वान्ततोषिणी ।
सत्यार्थपोषिणी चित्रमधुरानन्दभाषिणी ॥

ஸ்வஸ்த்யஸ்து ஹிதபாஷிண்யை யாவித்வத்
ஸ்வாந்ததோஷிணீ!

ஸத்யார்த்தபோஷிணீ சித்ரமதுரானந்தபாஷிணீ. ॥

—— தர்மஜ்ஞ பிரம்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திரிகள்.

"ஹிதபாஷிணீ"

" चक्षुष्मत्ता तु शास्त्रेण सूक्ष्मकार्यार्थदर्शिना ॥ "

நுட்பமான விஷயங்களை அறிவிக்கும் சாஸ்திரமே நேத்திரம்.

—— மஹாகவி காளிதாஸன்.

தொகுதி 1	ஸர்வஜித்து ஹூ தைமீ	1948 ஜனவரி	பகுதி 4

காயத்ரியின் மஹிமை.

"கலியின் பிரவாஹம் கரை புரண்டோடுகிறது. ஸதாசாரங்கள் எல்லாம் எங்கேயோ மூலை முடுக்கில் பதுங்கிக் கிடக்கின்றன. துராசாரங்கள் எங்குபார்த்தாலும் தலைவிரிகோலமாகத் தாண்டவ மாடுகின்றன. இப்படி இருக்கும் இக்காலத்தில்

வர்ண தர்மமாவது? ஆச்ரம தர்மமாவது? எப்படி அனுஷ்டிக்க முடியும்! அதிலும் முக்கியமாக பிராம்மண்யத்தை ரக்ஷிப்பதென்பது மிகவும் சிரமம். காலக்கிரமத்தில் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட வேண்டியதுதான் போலிருக்கிறதே" என்று ஆஸ்திகர்களுக்குள்ளே சிலர் அஞ்சுகிறார்கள். அவர்களைப் பார்த்து "நீங்கள் பயப்பட வேண்டாம். அன்னை காயத்ரியை ஆச்ரயிக்கும் த்விஜர்களுக்கு பயமேது? **सावित्रीमात्रमाश्रित्य-द्विजो भवति निर्भयः "ஸாவித்ரீமாத்ரமாச்ரித்யத்விஜோ பவதி நிர்ப்பய:"** என்று அபயப்ரதானம் செய்கிறார் விச்வாமித்திரர்.

முற்காலத்தில் அந்தணர்களுடைய பெருமை அளவிடமுடியாததாகவிருந்தது. ஒருவர் விந்தியமலையைத் தரைமட்டமாகச் செய்தார் சமுத்திரத்தை வற்ற வைத்தார். மற்றொருவர் வஜ்ராயுதத்துடன் கூடிய இந்திரனது புஜத்தை தூக்கினபடியே நிறுத்தினார். வேறு ஒருவர் ஜபம்செய்து கொண்டே, உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்காமல் ஆயிரக்கணக்கான அஸ்திரங்களை பிரயோகம் செய்யும் வீர அரசனை விரட்டி அடித்தார். இவ்வளவுக்கும் அவர்களிடமிருந்த பலம் யாது? சாரீரபலமா! ஸைன்யபலமா? இல்லை. வேறு என்ன பலம்? மந்திரபலமே பலம்.

तव मन्त्रकृतो मन्त्रैः दूरात्प्रशमितारिभिः ।
प्रत्यादिष्टा इव हि मे दृष्टलक्ष्यभिदः शराः ॥

தவமந்த்ரக்ருதோ மந்த்ரை: தூராத்ப்ரசமிதாரிபி:|
ப்ரத்யாதிஷ்டா இவஹிமே த்ருஷ்டலக்ஷ்யபித: சரா:||

(ஏவஸிஷ்டமுனிவரே! வெகுதூரத்திலிருக்கும் எதிரிகளையெல்லாம் அடியோடு அழிக்கின்ற தங்களுடைய மந்திரங்களால் எதிரிலிருக்கும் சத்துருக்களை மட்டும்அழிக்கவல்ல என்னுடைய பாணங்கள் புறக்கணிக்கப் பட்டுவிட்டன) என்று திலீபன் என்ற அரசன் கூறுவதாக மஹாகவி காளிதாஸன் வர்ணித்திருக்கிறார்.

மந்திரங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் குருமுகமாக உபதேசம் பெற்று ஆவிருத்தி செய்து இக்காலத்தில் சித்தியடைவது என்பதுமுடியுமா? முடியவேண்டாம். நாம் பிரதிதினம் அவசியம் ஜபிக்கவேண்டிய காயத்ரீ ஒன்றே நமக்குப்போதும் அதை சரிவர உபாஸித்துவந்தால் இஹத்திலும் பரத்திலும் ஸமஸ்தாபீஷ்டங்களையும் அடையலாம் என்பதில் ஐயமில்லை. அதை உபாஸிக்காமல் மற்றமந்திரங்களை சித்திசெய்ய

முயற்சிப்பதும் மற்ற கர்மாக்களை செய்வதும் "வஸ்திரம் தரித்துக்கொள்ளாத ஒருவன் தன் சரீரத்திற்கு செய்து கொள்ளும் அலங்காரத்திற்கு ஒப்பாகும்" என்று ஸ்ரீ அப்பைய்யதீக்ஷிதர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

"अवस्त्रोलंकारः सकलमपि सत्कर्म चरितम 1"

(சிவதத்வவிவேகம்)

"காயத்ரிக்கு ஸமமான வேறு மந்திரம் நான்கு வேதங்களிலுமில்லை" என்றும் "பாபங்களைத்துலைப்பதில் காயத்ரிக்கு சமமானது எதுவுமில்லை" என்றும் ஸந்தியாகாலத்தில் காயத்ரியை ஜபித்தால் மூன்று வேதங்களையும் பாராயணம் செய்த பயனை அடைகிறான்" என்றும், இம்மாதிரி இன்னும் பலவாறாக ஸ்மிருதிகள்புகழ்ந்துபேசுகின்றன. **'ஓஜோஸி-ஸஹோஸி"** என, பிரதிதினம் ஜபகாலத்தில் வேதமந்திரத்தால் அடியிற்கண்டவாறு காயத்ரியை நாம் துதிக்கிறோம். "ஏகாயத்ரீ! நீயே, தேஜஸ்வரூபிணியாயும், எதிரிகளை அழிக்கவல்ல சக்தியாயும், எல்லோருக்கும் பலமாயும், ப்ரகாசஸ்வரூபிணியாயும், தேவர்களுக்கு இருப்பிடமாயும், உலகம் முழுவதாயும் இருக்கிறாய். நீ, ஜபம் பண்ணுகிறவர்களை ரக்ஷிக்கக்கூடியவள். ஸமஸ்தாபீஷ்டங்களையும் அளிப்பவள்."

மேலும் ஸ்ரீராமன் இராவணனைக்கொன்றது பிரம்மாஸ்த்திரத்தால். இந்திரஜித் ஹனுமானைக்கட்டினதும் பிரம்மாஸ்த்திரத்தால். ஸ்ரீராமன் காகாஸுரனை மூவுலகிலும் துரத்தியடித்ததும் பிரம்மாஸ்திரத்தால். அப்படிப்பட்ட பிரம்மாஸ்திரம் என்பது என்ன? சொல்பமாறுதலுடன் கூடிய காயத்ரீதான், என்று சூதஸம்ஹிதையிலிருந்து தெரியவருகிறது. ஐஹிகபயன்களுள் எதையும் காயத்ரீஜபத்தாலேயே அடைவதற்கு வேண்டிய சில முறைகளும் ஷடி கிரந்தத்தில் காணப்படுகிறது.

சித்தசுத்தி ஏற்பட்டு முக்தி பெறவேண்டுமென்று நினைப்பவர்களுக்கும் காயத்ரீ ஜபம் சிறந்த ஸாதனம்.

"காயத்ரீமந்திரத்தில் மூன்று பாதங்கள் உள. ஒவ்வொரு பாதமும் ஒவ்வொரு வேதத்தின் ஸாரம். ஆதலால் காயத்ரீயை ஜபித்தால் ரிக், யஜுஸ், ஸாமம், என்று மூன்று வேதங்களின் பாராயணத்தால் அடையும் பயனைப்பெறலாம்" என்று மனு கூறுகிறார்.

பிராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர், என்ற மூன்று வர்ணத்தார்களும் "த்விஜர்கள்". "த்விஜர்கள்" என்றால் இரண்டு பிறப்பு உடையவர்கள் என்று பொருள். தாய்தந்தைகளிடமிருந்து முதல் பிறப்பு ஏற்படுகிறது. இரண்டாவது பிறப்பிற்குத்தாய், காயத்ரீ. தந்தை, காயத்ரீ உபதேசம் செய்யும் ஆசார்யன். முதல் பிறப்பைவிட இரண்டாவது பிறப்பே மிகவும் சிறந்தது. ஏனென்றால் இரண்டாவது பிறப்பை அடைந்தபிறகே மேற்கூறிய வர்ணத்தார்கள் வைதிக கர்மாக்களைச்செய்ய அதிகாரம் பெறுகிறார்கள். அந்த கர்மாக்களிலிருந்தே மோக்ஷம் வரையிலுள்ள ஸமஸ்த பயன்களையும் அவர்கள் அடையக்கூடும். ஆதலால் அப்படிப்பட்ட உயர்ந்த ஒரு ஸ்வரூபத்தை அளித்த அன்னை காயத்ரீயை மறக்கலாமா? மறந்தால் அது ஒரு பெரிய பாபம். "அவ்விதபாபம் ஒருவனுக்கு ஸம்பவித்து விட்டால் அவன் தீண்டத்தகாதவன். அவன் எவ்வித வைதிக கர்மாக்களுக்கும் தகுதியற்றவன்" என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன.

மேலும் காயத்ரீக்கு, "காயத்ரீ" "ஸாவித்ரீ," "ஸரஸ்வதீ" என்று மூன்று பெயர்கள் உள. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு தனித்தனிப் பெருமையைக் குறிப்பிடுகிறது.

1 கெட்ட பிரதிகிரஹம், அன்னதோஷம், மஹாபாபம், உபபாதகம், இவற்றிலிருந்து தன்னை ஜபிக்கிறவர்களை காப்பாற்றுவதால் "**காயத்ரீ**" என்றும்.

2 ஸூர்யனுக்குள்பட பிரகாசத்தை அளித்து ஸூர்யனுக்கு ஸூர்யனாயிருப்பதாலும், உலகங்களையெல்லாம் உண்டு பண்ணுவதாலும் "**ஸாவித்ரீ**" என்றும்.

3 வாக்ஸ்வரூபமாக இருப்பதால் "**ஸரஸ்வதீ**" என்றும் கூறப்படுகிறது.

प्रतिग्रहादन्नदोषात्पातकादुपपातकात् ।
गायत्री प्रोच्यते तस्माद्गायन्तं त्रायते यतः ॥
सवितृद्योतनाच्चैव सावित्री परिकीर्तिता ।
जगतः प्रसवित्रीवा, वाग्रूपत्वात्सरस्वती ॥

ப்ரதிக்ரஹாதன்ன தோஷாத்பாதகா துபபாதகாத் ।
காயத்ரீ ப்ரோச்யதே தஸ்மாத் காயந்தம் த்ராயதே யத: ॥
ஸவித்ருத்யோதனாச்சைவ ஸாவித்ரீ பரிகீர்த்திதா ।
ஜகத: ப்ரஸவித்ரீவா, வாக்ரூபத்வாத் ஸரஸ்வதீ ॥

இந்த உயர்ந்த மஹாமந்திரத்தை எவ்விதம் ஜபிக்கவேண்டுமென்பதைப்பற்றி அடுத்த இதழில் ஆராய்வோம்.

புண்யகாலங்களும் அதன் விசேஷங்களும்.

நாளது தைமீ 27உ திங்கட்கிழமை தினம் மஹோதய புண்யகாலம் ஸம்பவிக்கிறது. தைமாதத்திலோ, மாசிமாதத்திலோ, அமாவாஸ்யை திதி, சிரவண நக்ஷத்திரம் வ்யதீபாதம் என்ற யோகம் இவையெல்லாம் ஞாயிற்றுக்கிழமை உதயகாலத்தில் ஸம்பவித்தால் அதற்கு **அர்த்தோதயம்** என்று பெயர். மேற் கூறியவை எல்லாம் திங்கட்கிழமையில் ஸம்பவித்தால் **மஹோதயம்** என்று பெயர். இதில் ஒரு விசேஷம். வ்யதீபாத யோகத்தின் கடைசிபாகம், அமாவாஸ்யை திதியின் முதற்பாகம், சிரவண நக்ஷத்திரத்தின் நடுபாகம், இவை எல்லாம், ஞாயிற்றுக்கிழமை ஸூர்யோதயகாலத்தில் சேர்ந்தால் **அர்த்தோதயம்**. திங்கட்கிழமை ஸூர்யோதய காலத்தில் சேர்ந்தால் **மஹோதயம்**. இந்த புண்யகாலம் கோடி ஸூர்ய கிரஹணத்திற்கு ஸமமாகும்.

மாகஸ்நானம்.

பிரதி தினம் ப்ராத:ஸ்நானம் புண்யமானாலும், மாகமாதத்தில் அருணோதய காலத்தில் செய்யப்படும் ஸ்நானத்திற்கு பலன்கள் மிக அதிகமாகக் கூறப்பட்டிருக்கின்றன. தை மாத அமாவாஸ்யை முதல் மாசிமாத அமாவாஸ்யை வரையில் மாக மாஸம். இக்காலத்தில், 'பாலர்கள், வாலிபர்கள், விருத்தர்கள், ஸ்திரீகள், புருஷர்கள் எல்லோரும் ப்ராத:ஸ்நானம் செய்து அவரவர்கள் விரும்பிய பலன்களை பெறக்கூடும்." "பலன்களை விரும்பினாலும், விரும்பாதபோனாலும், ஸ்ரீமந்நாராயணனது திருப்தியை உத்தேசித்து எங்கேயாவது குளிர்ந்த ஜலத்தில் அருணோதய காலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும்" என்று விதிக்கப் பட்டிருப்பதால் இந்த மாக ஸ்நானம் "**நித்யம்**" (அவசியம் செய்தே தீரவேண்டும்) என்கிறது.

அன்றியும், இம்மாதத்தில் ஸூரியன் உதித்ததும் உதிக்காதுமாக இருக்கும் சமயத்தில் உலகிலுள்ள தீர்த்தங்கள் யாவும் "பிரம்மஹத்தி செய்தவனாயினும்சரி, ஸுராபானம் செய்தவனாயினும்சரி, எவனையும் பரிசுத்தம் செய்வோம்" என்றுசஞ்சரித்துக்கொண்டிருக்கின்றனவாம். நியமங்களுடன் மாகஸ்நானம் செய்துவந்த ஒரு ஸ்திரீ மறுஜென்மத்தில் அப்ஸரஸ்ஸாகப் பிறந்தாள் என்ற கதை பத்மபுராணத்தில் காணப்படுகிறது. ஆதலால் ஆஸ்திகரனைவரும் அவசியம் மாகஸ்நானம் செய்ய வேண்டும்.

கற்பனை—ஆனாலும் உண்மை.

பத்தாவது கிரஹம்.

பிரம்மதேவனுடைய சிருஷ்டியில் ஒன்பது கிரகங்களே உள. இவைதான் ஜ்யோதிஷ சாஸ்திரத்திலும் பிரசித்தி பெற்றிருக்கின்றன. ஆனால் ஓர் கவி பத்தாவது கிரஹம் ஒன்றை சிருஷ்டி செய்திருக்கிறார்.

अपारे काव्यसंसारे कविरेकः प्रजापतिः ।

(கரைகடந்த காவ்ய பிரபஞ்சத்திற்கு கவி ஒருவனே சிருஷ்டி கர்த்தா) எனக்கூறப் பட்டிருப்பதால் கவிக்கு சிருஷ்டிக்கும் திறமையும் உரிமையுமுண்டு.

மற்ற கிரஹங்களுக்கும் இந்த பத்தாவது கிரஹத்திற்கும் வேற்றுமை மிகஅதிகம். இது எப்பொழுதும் கன்யாராசியிலேயே ஸஞ்சரிக்கும். ஸதா வக்ரகதிதான் இதற்கு. எப்பொழுதும் இந்த கிரஹத்திற்கு ப்ரீதி செய்துகொண்டேயிருக்கவேண்டும். இந்த கிரஹத்தின் பெயர்தான் "ஜாமாதா" (மாப்பிள்ளை) என்பதாம்.

सदा वक्रः सदारुष्टः सदापूजामपेक्षते ।
कन्याराशिस्थितो नित्यं जामाता दशमोग्रहः ॥

ஸதா வக்ர: ஸதாருஷ்ட: ஸதா பூஜாமபேக்ஷதே ।
கன்யா ராசிஸ்திதோ நித்யம் ஜாமாதா தசமோக்ரஹ:

இதைக்கேட்டு ஒருக்கால் புதுமாப்பிள்ளைகள் கோபங்கொண்டு அக்கவியின் ஊர், பெயர், முதலியவைகளைக்கண்டு பிடித்து அவர்மேல் வழக்கைத் தொடர்ந்தாலும் தொடரலாம். அப்படிச் செய்வதில் நமக்கு யாதொருவிதமான ஆக்ஷேபமுமில்லை. ஆனால் அவர்கள் தமக்கு மாப்பிள்ளை வரும் வரையில் பொருத்திருந்து இக்கவியின் கற்பனையைப் பரீக்ஷித்துப் பார்த்தால் அப்பொழுது இக்கவியை போற்ற வேண்டுமென்றே அவர்கள் தேடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஸ்திரீ தர்மம்.

ஆசிரியர்.
திரியம்பகராயமகீ

மொழிபெயர்ப்பு.
ஆசிரியர்

பெரியோர்களுக்குப் பணிவிடை செய்தல்.

(சென்ற இதழ் 11-ம் பக்கத்தொடர்ச்சி)

மாமனார், மாமியார், கணவன் முதலிய பெரியோர்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை தானே செய்வது உத்தமம். திரௌபதி "குந்திக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை பிரதிதினம் நானே செய்து வருகிறேன்" என்று ஸத்யபாமையிடம் தெரிவிக்கிறாள். (ஆதலால் இக்காலத்திலுள்ள பெண்மணிகள் சிலர் அதைக்குறைவு என்று நினைப்பது பெரிய தவறு என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.)

வரவு செலவுகளை கவனித்தல்.

கணவனுடைய அனுமதி பெற்று ஸ்திரீகளே குடும்பத்திற்கு வேண்டிய சாமான்களை சேகரிக்கவும், சரியான முறையில் அவற்றை செலவழிக்கவும் வேண்டும். இப்படி செய்யுங் காலத்தில் மற்ற புருஷர்களுடன் பேசவேண்டி வருமே? அது தோஷமாகாதா? ஆகாது என்று அடியிற்கண்ட ஸ்மிருதி வாக்கியத்திலிருந்து தெரியவருகிறது (1) வியாபாரி, சன்னியாசி, வைத்யர், கிழவர், இவர்களைத்தவிர மற்ற பிற புருஷர்களுடன் ஒருநாளும் ஸ்திரீகள் பேசலாகாது. வேறு ஒருவரும் இல்லாத சமயத்தில் பிற புருஷர்களுடன் பேசவேண்டிய அவசிய மேற்பட்டால், புல் பூண்டு முதலியவற்றை மத்தியில் போட்டு பேசுவதுதான் உசிதம். ஸ்ரீ ஸீதாதேவி அசோகவனத்தில் இராவணனுடன் அவசியம் பேசும்படி நேர்ந்த காலத்தில் (2) "ஓர் துரும்பை மத்தியில் போட்டுப் பேசினாள்" என்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"குடும்பச் செலவிற்காக கணவனால் கொடுக்கப்படும் பொருளில் கொஞ்சம் மிச்சம் வைக்க வேண்டும். ஆனால் தர்மத்தில் செலவு செய்வதற்காக கொடுக்கப்படும் பொருளில் கொஞ்சங்கூட மிச்சம் வைக்கக்கூடாது" என்று மனு கூறுகிறார்.

---

1 नपरपुरुषमभिभाषेतान्यत्रवणिक्प्रव्रजितवैद्यवृद्धेभ्यः ।
2 तृणमन्तरतः कृत्वा प्रत्युवाचशुचिस्मिता ।

அதிதி பூஜை.

கிரஹஸ்தர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களுள் அதிதிபூஜை மிகவும் முக்கியமானது. இதை சுருதி, ஸ்மிருதி, புராணங்களெல்லாம் பலவாறாகக் கொண்டாடுகின்றன. ஒரு சமயம் யமலோகத்திற்குச் சென்ற **நசிகேதஸ்** என்ற பிராம்மணன், யமன் வீட்டிலில்லாத காரணத்தால் அந்த வீட்டில் எதையும் புசிக்காமல் மூன்று தினங்கள் தங்கியிருந்தான். மூன்று நாள் கழித்துத் திரும்பிவந்த யமனைப்பார்த்து அவனுடைய மனைவி அடியிற்கண்டவாறு கூறுகிறாள். (3) "அதிதியாக வரும் ஓர் வேதியர் அக்னியைப்போல் வீட்டிற்குள் நுழைகிறார். அவருக்கு அர்க்கியம் பாத்யம், ஆசமனீயம் முதலியவைகளைக் கொடுத்துத் தவக்கமன்னியில் பெரியோர்கள் உபசரிக்கிறார்கள். தாங்களும் அர்க்கியம் முதலியவற்றைக்கொடுத்து நம்முடைய கிரஹத்தில் தங்கியிருக்கும் அதிதியை உபசரியுங்கள்." (கடோபநிஷத்)

போதாயன ஸ்மிருதியில் (4) "பித்ருக்களுக்கும், தேவதைகளுக்கும், அதிதிகளுக்கும், ஸ்நேகிதர்களுக்குமளிக்காமல் என்னை புசித்தால் புசிப்பவர்களுக்கு நான் விஷமாக ஆகிவிடுவேன்" "மேற்கூறியவர்களுக்கெல்லாம் அளித்துவிட்டு புசித்தால் புசிப்பவர்களுக்கு அமிருதமாகி அவர்களை நான் ரக்ஷிப்பேன்" என்று அன்னம் கூறுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட அதிதி பூஜையில் கணவன் வீட்டில் இல்லாத காலத்திலுங்கூட ஸ்திரீகளுக்கு அதிகாரமுண்டு. ஆதலால்தான் சன்னியாசி வேஷம் பூண்டுவந்த இராவணனை இராமன் பர்ணசாலையில் இல்லாத காலத்திலுங்கூட ஸீதை உபசரித்தாள் என ராமாயணத்தில் காணப்படுகிறது.

3 वैश्वानरः प्रविशत्यतिथिर्ब्राह्मणोगृहान् ॥
तस्यैतां शान्तिं कुर्वन्तिहर वैवस्वतोदकम् ॥
(கடோபநிஷத்)

4 यो माऽदत्वापितृदेवताभ्यो
भृत्यातिथीनां च सुहृज्जनस्य ।
संपन्नमश्नन् विषमत्तिमोहान्
तमद्म्यहं तस्यचमृत्युरस्मि ॥
போதாயனஸ்மிருதி.

பரிமாறும் முறை.

ஸ்திரீகளே பரிமாற வேண்டுமல்லாமல் பரிசாரகர்களைக்கொண்டு பரிமாறச்செய்வது சரியல்ல. கணவன் புசிக்கும் சமயத்தில் மனைவி சமீபத்திலேயே நின்று கொண்டிருக்கக்கூடாது இலையில் பதார்த்தங்களை பரிமாறிவிட்டு உள்ளே சென்றுவிட வேண்டும். (5) "மனைவி பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதும், ஒரு வஸ்திரத்துடனும், நின்று கொண்டும், சாப்பிடலாகாது" என யாக்ஞவல்கியர் கூறுகிறார்.

சமீபத்தில் நிற்கவே கூடாது என்றிருப்பதால், கூட உட்கார்ந்து சாப்பிடலாகாது என்று சொல்லத்தேவை இல்லை. இந்த சாஸ்திரத்தை மீறினால் (6) 'அவர்களுக்குப்பிறக்கும் குழந்தைகள் புஷ்டியாக இரா' என சுருதி கூறுகிறது. (இக்காலத்தில் பலகுழந்தைகள் கட்டி முதலிய ரோகங்களால் மிகவும் மெலிந்து இருப்பதற்கு மேற்படி துராசாரமும் ஒரு காரணமாக இருக்கலாமோ?)

அன்னம் முதலிய பதார்த்தங்களை கரண்டியால் பரிமாற வேண்டுமல்லாமல் கையால் பரிமாறக்கூடாது. எண்ணெயில் பாகம் செய்யப்பட்டதும், பாகமே செய்யப்படாத பழம் முதலிய வஸ்துக்களையும் கையாலேயே பரிமாறலாம். இரும்புப் பாத்திரங்களில் பரிமாறலாகாது.

"பிரியத்தாலோ, பயத்தாலோ, அல்லது பணத்திற்காகவோ ஒரே பங்க்தியில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு வித்தியாசமாக உண்வுப்பொருள்களை யளித்தால் அதுவே "பிரம்மஹத்யா தோஷம்" என் முனிவர்கள் கூறுகிறார்கள். வேதங்களிலும் இவ்விதமே காணப்படுகிறது.

பிரதிதினம் கணவனுக்கு நமஸ்காரம் செய்து விட்டு ஸ்திரீகள் போஜனத்திற்குச் செல்லவேண்டும். கணவனுக்குப்பிடித்த மில்லாத உணவு பொருள்களை ஸ்திரீகளும் விலக்கவேண்டும்.

5 नभार्यादर्शनेऽश्नीयान्नैकवासा नसंस्थितः ॥
6 जाया या अन्तेनाऽश्नीयादवीर्यवदपत्य भवति ॥

போகி-பொங்கல்.

D. S. பாலசுப்பிரமணிய சாஸ்திரி, தஞ்சை அரண்மனைச் சோதிடர்.

நாம் ஒவ்வொருவருஷத்திலும் உத்தராயண தினத்திற்கு முந்தின தினத்தில் போகி என்று ஒரு பண்டிகையைக்கொண்டாடுகிறோம் ஏன்? இதுபோல் உத்தராயண தினத்தில் பொங்கல் என்று ஒரு பண்டிகையையும்அனுஷ்டிக்கிறோம் ஏன்? என்ற, இரண்டு கேள்விகள் உண்டு. இவற்றிற்குறிய பதிலை இந்த ஹிதபாஷிணீ மூலமாக யாவர்க்கும் அறிவிக்க விரும்புகிறது இந்த ஸ்ரீ பாலகுருநாதஜ்யோதிர் வைத்ய வித்யாசாலை.

இங்கு உத்தராயண தினம் யாது? என்பதும் அதைப்பிரதானமாக நாம் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? வென்பதும் முதலில் தெரிந்து கொள்வோம்.

பொதுவாகப் பிராணிகளுக்கெல்லாம் வெளிச்சத்தில் (பகலில்) அறிவு உண்டாவதும் இருட்டில் (இராத்திரியில்) அவ்வறிவு மங்குவதும் யாவரும் அறிந்த விஷயம். நமக்கு இம்மாதிரியாகப் பகல் இரவு என இரண்டு காலங்களிருப்பது போல் நம்மை ரக்ஷிக்கின்ற பிதுருக்களுக்கும், நம்மையும் பிதுருக்களையும் ரக்ஷிக்கின்ற தேவதைகளுக்கும் பகல் இரவு என்னும் இரண்டு காலங்களுமுண்டு. முன்னிலாக் காலங்கள் (சுக்கிலபக்ஷநாட்கள்) பிதுருக்களுக்குப் பகலென்றும், பின்னிலாக் காலங்கள் (கிருஷ்ணபக்ஷ நாட்கள்) அவர்களுக்கு இரவென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதுபோலவே தேவதைகளுக்கு ஒளிவளர் காலம் (உத்தராயணம்) பகலென்றும், ஒளிபடுங்காலம் (தக்ஷிணாயனம்) இரவென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இல்லாது பிறவாது; இருந்தால் முதலிலும் இருக்கும் என்னும் பழமொழிகள் நாம் யாவரும் அறிந்ததே. இப்பழமொழிகளுக்கு வேதாந்திகள் எப்பொருளுரைப்பினும் அதுமெய்ப்பொருளேயாகும். ஆதலால் நாம் ஒவ்வொருவரும் இரவு முடிந்து பகல் வரும்பொழுது (விடியற்காலையில்) தூக்கத்திலிருந்து விடுபடும்பொழுது சந்தோஷமாகவும், ஊக்கத்தோடும், உற்சாஹத்தோடும் இருப்போமாயின் அன்று முழுவதும் நமக்குச் சந்தோஷமும் ஊக்கமும் உற்சாகமும் வளர்ந்து, தொட்ட காரியங்களெல்லாம் இனிது முடிவடைகின்றன. இது போலவே பிதுருக்களுக்கு விடியற்காலமாகிய அமாவாசையில் சிராத்தம் செய்து, செய்யமுடியாதவர்கள் திலதர்ப்பணமாவது செய்து பிதுருக்களைத் திருப்திபடுத்தி அவர்களால் நமக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைப் பெறுகிறோம்.

இவ்விதமே தேவதைகளுக்குப் பகலாய்விளங்கும் ஒளிவளர்காலத்தின் (உத்தராயணத்தின்) முதற்பகலில்அவர்களைத் திருப்திப்படுத்துவோமாயின் அவர்களால் நமக்குக் கிடைக்கவேண்டியநன்மைகளை நாம் குறைவின்றி அடைந்து அனுபவிக்க முடியும். இங்கு தேவதைகளுக்கு நாம் திருப்திகரமாக எந்த காரியத்

தையும் செய்யாவிட்டாலும் அவர்கள் நமக்கு நன்மைகளைச் செய்வதுநிச்சயம். ஆனால் அவற்றை நாம் அடைவதும் அனுபவிப்பதும் இயலாததாக முடியும் நம்மிடத்தில் எவ்விதம் பதிர்பிரயோசத்தையும் எதிர்பாராது மேகம் மழைபொழிவதையும், முன்கூட்டி ஏரி குளம் முதலிய நீர்பாசனங்களைச் செப்பனிட்டு வைத்துக்கொள்ளாத ஊரார் அம்மழைஜலத்தின் நன்மையை அடையாது போவதையும் இங்கு கவனிப்போமாயின் தேவதைகள் குணத்திற்கும் நம் குணத்திற்கும் உள்ள வித்யாசம் நன்கு புலப்படும்.

இதற்காகவே இந்த உத்தராயண தினத்தை வருஷத்தின் முக்கியமான தினமாகக்கொண்டாட வேண்டும். இதற்காகவே ஒவ்வொரு பஞ்சாங்கத்திலும் இவ்வருஷத்தின் தேவதையா[illegible]சங்கராந்தி தேவதையின்) பெயர் குணம் ஆயுதம் நிலை முதலியவற்றை விவரித்திருக்கின்றது. இப்புதுவருஷத்திற்கு இதுவே முதல் நாளானமையால் இன்று எல்லாம் புதிதாகவும், புஷ்டிகரமாகவும், மதுரமாகவும் இருக்கவேண்டுமென்று நம் முன்னோர்கள் இந்த உத்தராயணதினத்தில் புதியபானையில்புதிய அரிசியைக்கொண்டுபாலும் புது வெல்லமும் சேர்த்துப்பொங்கி இந்தப்பொங்கலை ஷை சங்கராந்தி தேவதைக்கு (இந்த புதுவருஷத்தின் அதிதேவதைக்கும்) படைத்து அனுக்கிரகத்தைப்பெற நம்மைத் தயார்செய்து கொள்ளவேண்டும். ஷை தேவதையை ஆராதிக்குமுன் நம் பிதுரு தேவதைகளையும் நாம் ஆராதிக்க வேண்டும் என்று ஏற்படுத்தியுள்ளார்கள்.

இவ்விதம் நமக்கு வருஷம் முழுவதும் வேண்டிய நன்மைகளைச் செய்துவிட்டு ஷை வேலையை மற்றொரு தேவதைக்கு ஒப்புவித்துச் செல்லும் பழையதேவதையை நாம், ஆராதிக்காமலிருந்தால் நாம் நன்றி கெட்டவர்களாகவே ஆவோம். பிறகு

कृतघ्नस्य न निर्वृतिः

(செய்நன்றி மறந்தவனுக்கு என்ன நன்மையும் உண்டாகாது) என்ற வசனப்படி நாம் சுகம்பெற முடியாதவர்களாகி விடுவோம்

ஒவ்வொரு ஆபீஸிலும்முக்கியமான் ஆபீஸர். அவ்வாபீஸை விட்டு போகும் பொழுது நாம் ஏன் ஸெண்டாப் (send off) கொடுக்கிறோம் என்றும், புதிதாக வரும் அவ்வாபீஸருக்கு ஏன் வெல்க்கம் அட்ரெஸ் (Welcome address) கொடுக்கிறோம் என்றும் ஆலோசித்துப்பார்த்தால் செல்பவருக்கு மரியாதை செய்வதுகூட, வருபவர்கு மரியாதைசெய்வதுபோல் அவசியம் தான் என்று நன்றாய் விளங்கும்.

போகி என்பது ஸம்ஸ்கிருதத்திலுள்ள **भोगि** பதத்தின் மருவு என்பதைவிட, போது என்ற தென்மொழியின் வினைச்சொல்லிலிருந்து போகும்நிலையடைந்தது அதாவது போகுவது என்ற பொருளிலுள்ளதென்மொழிச்சொல்என்றால் இது செல்லும் தேவதை அல்லது செல்லும் வருஷம் என்றேயாகும். இந்த போகிப்பண்டிகை தினத்தில் நாம் செய்யும் காரியங்களையும் கவனிப்போம்; பழய உபயோகமற்ற சாமான்களை எரிந்து விடுகின்றோம். சிலவற்றை எரித்தும் விடுகின்றோம். தலை முழுகுகின்றோம் (எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றோம்) பழய உடைகளைக் களைகின்றோம். இக்

காரியங்களுக்குச் சான்றாக தென்னாடுகளாகிய தெலுங்கு, தமிழ், கன்னாடு மலைநாடுகளில் முறையே வழங்கும்(भोगिमण्टु) போகிமண்ட்ட (पोहिकण्वु) (போகிக்கணவு) पोगिचेङ्कि) அல்லது होगिचेङ्कि போகி பெங்கி அல்லது ஹோகி பெங்கி) (पोहित्ती) போகித்தீ என்கிற பதங்களையும் ஆங்காங்கு நடைபெறும் காரியங்களையும் கவனிக்க வேண்டியது அவசியம்.

இவற்றையெல்லாம் ஆராயுமிடத்து போகி-பொங்கல் என்னும் பண்டிகைகள் யாவை? என் அவ்விதம் நாம் கொண்டாட வேண்டும் என்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ முத்துஸ்வாமிதீக்ஷிதரவர்கள் ஸாஹித்யங்கள்

ஸங்கீத பூஷணம் P. V. கணேசய்யர் & ராமய்யர் அவர்களால் ஸ்வரப்படுத்தப்பட்டு "ஹிதபாஷிணீ" ஆசிரியரவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமினாதஸ்வாமி கீர்த்தனம்.

ராகம்-நாட்டை.] [தாளம்-ஆதி. ஒருகளைச்சவுக்கம்.

பல்லவி

स्वामिनाथ परिपालयाशुमां — ஸ்வாமினாத பரிபாலயா சுமாம்
स्वप्रकाश वल्लीश गुरुगुह — ஸ்வப்ரகாச வல்லீச குருகுஹ
देवसेनेश — தேவஸேனேச (ஸ்வா)

அநுபல்லவி

कामजनक पराधीश सेवित — காமஜனக பராதீச ஸேவித
कार्तिकेय नारदादि भावित — கார்த்திகேய நாரதாதி பாவித.
वामदेवपार्वतीसुकुमार — வாமதேவ பார்வதி ஸுகுமார
वारिजास्त्र संमोहिताकार — வாரிஜாஸ்த்ர ஸம்மோஹிதாகார (ஸ்வா)

சரணம் (மத்யகாலம்)

कामितार्थवितरणनिपुणचरण — காமிதார்த்தவிதரணநிபுணசரண
काव्यनाटकालंकाराभरण — காவ்ய நாடகாலங்காராபரண
भूमिजलाग्निवायुगगनकिरण — பூமிஜலாக்னிவாயுககனகிரண
बोधरूपनित्यानन्दकरण — போதரூப நித்யானந்தகரண (ஸ்வா)

மொழிபெயர்ப்பு.

பல்லவி

ஏ ஸ்வாமிநாத! என்னை விரைவில் காப்பாற்றவேண்டும்.
ஏ, ஸ்வயம் பிரகாச! ஏவல்லீச! ஏகுருகுஹ!
ஏ தேவஸேனேச (என்னைக் காப்பாற்ற வேண்டும்)

அனுபல்லவி

விஷ்ணு பிர்மா இவர்களால் ஸேவிக்கப்பட்டவரே!
கார்த்திகேயரே! நாரதர்முதலிய முனிவர்களால் போற்றபட்டவரே!
பரமேச்வரன் பார்வதி இவர்களுடைய செல்வப் புதல்வரே!
மன்மதனுக்குள்பட மோஹத்தையளிக்கும் சரீரத்தை உடையவரே!
(என்னைக் காப்பாற்ற வேண்டும்.)

சரணம்

பக்தர்கள்விரும்பிய பொருள்களையெல்லாம் அளிக்கவல்ல சரணத்தை உடையவரே!
காவ்யம் நாடகம் அலங்காரம் இவைகளுக்கு ஆபரணம்போன்றவரே!
பூமி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களையும் உண்டு பண்ணியவரே அறிவடிவமானவரே!
அழியா ஆனந்தத்தை அளிப்பவரே!
(என்னைக் காப்பாற்ற வேண்டும்.)

ராகம்: நாட்டை. தாளம்—ஆதி (ஒருகளைச்சவுக்கம்)

ராகலக்ஷணம்.

(1) இது ஒரு ஜன்யராகம் (கனபஞ்சகத்தில் ஒன்று)
(2) 36-வது மேளகர்த்தா சலநாட்டையில் ஜன்யம்
3 3 1 3 3
(3) ஆரோகஹணம் : ஸ ரி க ம ப த நி ஸ்.
அவரோஹணம் : ஸ் நி ப ம ரி ஸ .
(4) ஷட்ஜம், ஷட்ஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், ஷட்ஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம் இவைகள் இந்தராகத்தின் ஸ்வரஸ்தானங்கள்.
(5) ஸம்பூர்ண, ஔடவராகம், உபாங்கராகம்.
(6) கிரஹஸ்வரம் ஸ, ப. நியாஸஸ்வரம் ஸ. அம்சஸ்வரம் ரி, த
(7) மிகப்பழமையான ராகம். சாயங்கால வேளையில் பாட ரஞ்சகமாக இருக்கும்.

இந்த ராகத்தின் விசேஷஸஞ்சாரங்கள்.
தநிஸ்நீஸா—பஸ்நிபம—கமரிஸ—பநிஸ்கம் ரிஸ்நி.

குறிப்பு:— இந்த ராகத்தை கச்சேரிகளின் ஆரம்பத்தில் பாட கச்சேரி நன்றாக களைகட்டி, சோபிக்கும். வைணிகர்கள் தானம் வாசிப்பதற்கு இந்த ராகத்திற்கு முக்கியத்வம் கொடுப்பது குறிப்பிடத்தகுந்தது.

ஸ்வரஸாஹித்யம்

பல்லவி

1	ஸா ; நீ ஸ ரி க் மா , பநீ	பா : மா ரீ	; ப ம ரீ , ஸ
	ஸ்வாமி நா . . த பரி	பா லயா	சு . மா ம்
2	—— டை ——	பநிஸ்நிபமரீ	—— டை ——
	—— டை ——	பா . . . ல யா	—— டை ——
3	—— டை ——	பநிஸ்ரீ ஸ்நிப	ப ம ப ம ரீ , ஸ
	—— டை ——	பா . . . ல யா.	. . சு . மாம்
4	ஸா ; நீஸரி ஸரிகாமா, பநீ	பநிஸ்க்ம்ரிஸ்நி	ப ம ப ம ரீ, ஸ
	ஸ்வாமி நா . . . . த பரி	பா . . . ல . யா	. . சு . மாம
1	ஸா நீ பா தா நீ ஸா ; க ம	பா, பஸ்நி பம	க ம ப மா மரிஸ
	ஸ்வ . ப்ர கா . ச வல்	லீ ச குரு குஹ	தே. வஸேநே . ச
2	ஸாரீஸாஸா ; ஸா ; கம	பா , பஸ்நிபம	கமபஸ்நிபமரி
	ஸ்வ . ப்ர கா ச வல் .	லீ ச குரு குஹ	தே . ஸே . நே . ச

(ஸ்வா)

அநுபல்லவி

1	பா ; மாரீ ரீஸா ஸநி நிஸ	; ஸா ரீ ஸா	; ஸரீகமா
	கா ம ஜ ன க ப . . ரா	தீ . ச	ஸே . வி த
2	பநிஸ்நிபமநிபபமரீஸாரிஸஸாஸ	; ஸாரீஸா	; ஸ ரீ க மா
	கா . . . ம ஜ . ன . க ப . . . ரா	தீ . ச	ஸே . வித
	ஸா ; ரீஸா ; பா மா ;	ரீஸா ; பா	பா நி நி ப ம பா
	கார்த்திகே ய ந	ர தா தி	பா . . வி தா
1	; , காமபா ; பா பதநீ	ஸ்ா, ஸ்ா, ஸ்ா,	ஸ்ா ஸ்ா ; ஸ்ா
	வாமதே வ பா . ர்	வ தீ ஸ	கு மா ர
2	; , காமபநிஸ்நிபமபதநீ	ஸ்ா, ஸ்ா, ஸ்ா	ரீ , ஸ்ா , ஸ்ா
	வாமதே . . . வ. பா . .	ர்வ தீ ஸ	கு மா ர
	ஸ்ரிகா ம்ா ரீரீ ஸ்ா ஸ்ா ;	ஸ்நிஸரிநிபா	; நி ப ப ம ரீ
	வா. ரி ஜா . ஸ்த்ர ஸம்	மோ . . . ஹி தா	கா . . . ர

(ஸ்வா)

சரணம் (மத்யமகாலம்)

ஸநிஸரீஸபமரிஸமரிஸஸநிஸ	ஸாஸபாபபநி	ஸ்ாஸ்ரிரிஸ்ஸ்ஸ்
கா.மிதார்த்தவிதரணநிபுணசரண	காவ்யநாடகா	லங்கா ர பரண
டாநிப ரீரிஸ்ாஸ் ஸ்ரிக் க்ம்ரி	ஸ்ாரிநீஸ்ஸ்நி	பாஸ்நிபபமரி
பூமிஜலாக்னிவாயு ககன கிரண	போத ரூப நித்	யானந்தகரண

(ஸ்வா)

சிட்டைஸ்வரம்

ஸா , ரிகமபநி பபமமரிரிஸரி	ஸா , மக பம நி	பம கம ரிரி ஸநி.
ஸரிகமாப கமபஸ்ாநி பமரிரி	ஸா , ரிஸ்நி பஸ்	நிபம நிபம ரிரி,
ஸரிகமா்பதநிஸ்ரீஸ்நிபமரி	ஸா , ரிஸ்ஸ்நிநி	பப மம ரிரி ஸநி
ஸரிஸமகபமநிபஸ்நிஸ்ரீஸ்ம்ரி	, ஸ்நிபரிஸ்ாநி	பம கமா ரிஸநி

(ஸ்வா)

ராமாயண ரத்னப்ரிகாசம்.

गृहीत्वा प्रेक्षमाणा सा भर्तुः करविभूषणम् ।
भर्तारमिव संप्राप्ता जानकी मुदिता भवत् ॥

க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்த்து: கரவிபூஷணம்।
பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா ஜானகீ முதிதா பவத்॥

(சுந்தர காண்டம் 36வது ஸர்க்கம் 4வது சுலோகம்.)

ஸ்ரீமத்வால்மீகிராமாயணத்தில் பற்பல அர்த்தங்களைக் கொண்ட சுலோகங்களுள் இது ஒன்று. அறிவாளிகளுடைய புத்தி சக்திக் கேற்றவாறு இம்மாதிரி சுலோகங்களின் அர்த்தங்களும் விரிந்து கொண்டே போகும். எல்லா அர்த்தங்களையும் ஸவிஸ்தாரமாக [illegible]ப்பு. ஸமீபத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் **ஓர் சுவடியில்** இந்த சுலோகத்தின் ரஸமான பல அர்த்தங்கள் காணப்படுகின்றன. இதுவரையில் அச்சிடப் பட்டிருக்கும் ராமாயண வியாக்யானங்களில் இதிலுள்ள அர்த்தங்களெல்லாம் காணப்படாததாலும், அவசியம் அனைவரும் அறிய வேண்டியதாகையாலும் அவற்றைத்தமிழில் இங்கு எழுதுகிறோம்.

1 "ஸ்ரீராமரால் கொடுக்கபட்ட மோதிரம் இதோ இருக்கிறது, பாருங்கள்" என்று ஆஞ்சநேயன் மோதிரத்தைக் காண்பித்தான். அதை ஸீதையிடம் அவன் கொடுப்பதற்கு முன்பே, ஆவலுடன் தானாகவே மோதிரத்தை ஆஞ்சநேயனுடைய கையிலிருந்து எடுத்துக் கொண்டு விட்டாள் ஸீதை, என்பதை "க்ருஹீத்வா" என்ற பதம் குறிப்பிடுகிறது.

2 மேலும், ஸீதா தேவியின் கை, கொடுக்கும் ஸ்வபாவத்துடன் கூடியது. வாங்கிக்கொள்ளும் ஸ்வபாவம் அதற்குக் கிடையாது ஆதலாலும் தானே எடுத்துக் கொண்டாள் என்கிறது.

3 மேலும் இருவரையும் ஸ்ரீராமன் தன் விவாஹகாலத்தில் கையிலேந்தினதால் மோதிரமும், ஸீதையும் விசேஷ நட்பு உடையவர்களாம். ஆதலால்; இப்பொழுது ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்து ஸீதை வருந்திக்கொண்டிருப்பதைக் கண்டு மனம் தாங்காமல் மோதிரம் எப்படியாவது ஸீதையிடம் சென்று அவளுக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமென்று நினைத்ததாம். உடனே பக்தனுடைய கையிலேறி ஸீதையிடம் வந்துவிட்டது. ஸீதையும் அப்படிப்பட்ட தன் தோழியைக் கண்டதும் குதூ

ஹலத்துடன் கைகொடுத்து அழைக்கிறாளாம்

4 பக்தர்களுக்கு, பகவானிடம் ப்ரேமை இருப்பதுபோல் தன்னைப்போன்ற மற்ற பக்தர்களிடத்திலும் ப்ரேமை இருப்பது இயல்பு. ஸ்ரீராமனையே அனவரதம் மனதில் தியானம் செய்து வருவதால் ஸீதையை ராமபக்தை என்றும் சொல்லலாம். மோதிரமும் ஸ்ரீராமனை எழுத்து உருவமாக ஹிருதயமென்ற தன்மத்திய பிரதேசத்தில் தரித்துக் கொண்டிருப்பதால் ராமபக்தனும். ஆதலால் அதைக் கண்டதும் ப்ரேமையுடன் ஸீதை எதிர்கொண்டு அழைக்கிறாள் என்றவாறு.

5 "ஸ்ரீராமன் காட்டிற்குச் செல்லுகையில் தன் நகைகள் எல்லாவற்றையும்போல நம்மையும் அயோத்தியிலேயே வைத்து விடுவார். ஆனால் எவ்வகையிலும் ஸ்ரீராமனை விட்டுபிரியக் கூடாது" என்று எண்ணங் கொண்ட மோதிரம் காட்டிற்குக்கிளம்புவதற்கு முன்பே ஸீதையின்கைக்குவந்துவிட்டது காட்டிற்கு வந்தபிறகு ஸீதையிடமிருந்து ராமன் கைக்கு மாறியது. ஆதலால் ராமனை விட்டு எக்காலத்திலும் பிரியக் கூடாது என்ற அபிப்ராயத்துடன் கூடியது மோதிரம். ஸீதைக்கும் அதே அபிப்ராயம். ஒரே விதமான அபிப்ராயமுள்ளவர்கள் பரஸ்பரம் நேசத்துடன் இருப்பது இயற்கையல்லவா? ஆகையால்தான் ஸீதை மிகசந்தோஷத்துடன் மோதிரத்தை எதிர்கொண்டு அழைத்தாள் என்றும் கூறலாம்

6 ஸ்ரீராமனிடம் இருந்த ரத்னங்கள் இரண்டு. ஸீதை ஒன்று. மோதிரம்ஒன்று ஸீதை ஸ்ரீராமன் கையிலிருந்து நழுவி ராவணன் கையில் சிக்குண்டாள். மோதிரமோ அப்படியல்ல. ஆதலால் ஸீதை "தன்னைவிட மோதிரம் மிக சாமர்த்திய சாலி என்றும், பரிசுத்தமானதென்றும்" கருதி மோதிரத்தை வரவேற்றாள் என்றுமாம்.

"பர்த்தா நாம பரம் நார்யா பூஷணம் பூஷணாதபி" (ஸ்திரீகளுக்கு மற்ற ஆபரணங்களைவிட கணவனே சிறந்த ஆபரணம்) என்ற நியாயப்படி ஸீதை ஸ்ரீராமனையே தன் ஆபரணம் என்று கருதியிருக்கிறாளாம். மோதிரமும் **பர்த்துஸ்ஸ கரவிபூஷணம்.** (ஸீதையின் பர்த்தாவாகிய ஸ்ரீராமனுடைய கையை சிறந்த ஆபரணமாகக்கொண்டது) மற்றவர்கள், மோதிரம் முதலிய ஆபரணங்களை அணிந்தால் அவைகளால் சரீரத்திற்கு ஒரு சோபை ஏற்படுகிறது. ஆனால் *

ஸ்ரீராமனைப்போன்ற ஸுந்தர புருஷர்கள் ஆபரணங்களை

* कर एव विशिष्टं आभरणं यस्य तत् ॥

அணிந்தால், அந்த ஆபரணங்களுக்கு அவர்களுடைய சரீரத்தால் தனிப்பெருமையும், சோபையுமேற்படுகிறது. ஆதலால் மோதிரத்திற்கு ஸ்ரீராமனது கை சிறந்த ஆபரணம். ஸீதைக்கும் ஸ்ரீராமனுடைய புஜம் ஆபரணமாகையால் அவளுக்கு மோதிரத்தில் அவ்வளவு பிரியம் என்றபடி

8 **பர்த்து:** என்றால் ஸர்வலோக ரக்ஷகரான ஸ்ரீ மஹாவிஷ்ணு என்று அர்த்தம். அவருடைய புஜத்திற்கு ஆபரணம் சக்ராயுதம். அம்பரீஷ மஹாராஜன் பகவானிடத்திலேயே மனதை அர்ப்பணம் செய்திருந்தபடியால், அவனையும் அவனுடைய ராஜ்யத்தையும் ரக்ஷிப்பதற்காக பகவான் சக்ராயுதத்தை அவனுக்குக் காவலாக அனுப்பியிருந்தார். அதுபோல் * ஸீதையும் எப்பொழுதும் ராமத்யானம் செய்துகொண்டும், ராமநாமாவையே வாக்கினால் உச்சரித்துக்கொண்டும் இருக்கிறபடியால் அவளை ரக்ஷிப்பதற்காக பர்த்தாவினுடையகரவிபூஷணமான மோதிரம் அவளருகில் வந்ததாம். அதை மிக ஆவலுடன் வரவேற்றாள் என்றும்.

*

இவ்விதம் **க்ருஹீத்வா** என்ற பதத்திலிருந்து த்வனிக்கும் அர்த்தங்கள் கூறப்பட்டன. மற்ற பதங்களின் அர்த்தங்களை அடுத்த இதழில் காணலாம்.

* रामेति रामेति सदैवबुद्ध्या विचिन्त्य वाचा ब्रुवतीतमेव॥

"ஹிந்துபாஷிணி"

(ஹிந்துமதத்தின் கலாசாரங்களையும், தத்வங்களையும் பரவச்செய்யும் ஓர் தமிழ் மாதப் பத்திரிகை.)

பிரதி தமிழ்மாதம் 15 தேதிக்குள் வெளிவரும்.

சந்தா விபரம்.

1.	போஷகர்கள்	ரூ. 50—0—0
2.	ஆயுள் மெம்பர்	ரூ. 25—0—0
3.	வருடசந்தா	ரூ. 3—0—0
4	தனிப்பிரதி	ரூ. 0—5—0

ஒருவருஷத்திற்குக்குறைந்த சந்தா கிடையாது.

R. முத்துகிருஷ்ண சாஸ்திரிகள்,
ஆசிரியர், 1835/3, மேலவீதி, தஞ்சை.

கண்ணோய் அணுகா நெறிகள்.

Dr. S. வெங்கட்டராஜன். L. I. M. (Regd.)

திண்ணார் பண்ணைச் சிறுகீரை
　　தின்னமறந்தார் சீர்கேடாய்
பொன்னாங்காணிக் கறிகூட்டார்
　　பூசார் பாதம் நெய்யுண்ணார்
பண்ணார் மதியந்தனை பாரார்
　　பால்வார்த்துண்ணார் பல் தேயார்
கண்ணோவதனால் கவல்வர்
　　அதை யாமும் சொல்லக்கடவோமே.

திண்ணார் பண்ணைச் சிறுகீரை:— பண்ணைக் கீரை (இது செங்கல்பட்டு ஜில்லாவில் ஏராளமாகக் கிடைக்கும்) சிறுகீரை (திருச்சினாப்பள்ளியில் கிடைக்கின்றது.) இந்த இருவித கீரை வகைகளை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன்,

பொன்னாங்காணிக்கறிகூட்டார்:- பொன்னாங்காணிக் கீரையை புளிசேர்க்காமல் கறியாகச் செய்து சாப்பிடவேண்டும். அதன் அர்த்தமோவெனில், பொன் + ஆம் + காண் + நீ = பொன்னாங்காணி. அதாவது நீ இதை சாப்பிட்டால் உன் தேகம் பொன்னிறமாவதைக் காண்பாய். என்பதைக் குறிப்பதனால் இதை எப்பொழுதும் உபயோகிப்பது நலம். இதற்கு வானநாடு என்றும் பெயர் உண்டு. ஏனெனில் தேவர்களின் நாடான ஸ்வர்க்க லோகம் பொன்னாலாகியது. அந்த பொன் 3 வகைப்படும். அவையாவன: ஆடகம், கிளிச்சிறை, ஜாம்போனகம். நாம் இப்போது நகைகளாக அணிந்துவரும் தங்கம் ஆடகம் எனப்படும். பரோடா போன்ற பிராந்தியத்திலுள்ள தங்கம் கிளிச்சிறை என்ற ரகத்தை சேர்ந்தது அது வெண்ணெய் போல் மிருதுவாகவும், ரேகைகள்படும்படியாகவும் இருக்கும் தேவர்களின் உலகம் ஜாம்போனகம் என்றவகைப் பொன்னாலாகியது. அது அதிக பிரகாசமுள்ளது. நமது ஊனக்கண்களால் பார்க்கமுடியாது. கண்கள் பொட்டையாகி விடும்.

பூசார்பாதம்:— அதாவது பழயகாலங்களில் 'தளமிடுதல்'' என்பதாக ஒரு ஸம்பிரதாயம் உண்டு. இராக்காலங்களில் புதிதாக உருக்கிய ஆவின் நெய்யை படுக்கைக்குச் செல்லுமுன் இரு உள்ளங்கால்களி

லும் நன்றாக சூடு ஏற்படும் வரை தேய்த்து, ஒரு தட்டில் தவிட்டைப் பறப்பி, அதில் இரண்டு கால்களையும் அமுக்கி நின்று, பின்பு அப்படியே அசங்காமல் படுத்துக் கொள்ள வேண்டும். விடியற்காலையில் நன்கு குளிர்ந்த ஜலத்தினால் கல்லில் தேய்த்துக் கழுவி நன்றாகத்துடைத்து இழைத்த சந்தணத்தை இரு உள்ளங்காலிலும் பூசிக்காய்ந்த பின் வெளியில் செல்லலாம் இதைப் பின் கண்ட செய்யுளினால் கண்டு கொள்க.

"கண்ணது தாவுங்கே கடுகியே அழன்று வந்தால்
நண்ணிய உள்ளங்காலில் நறு நெய்யை மிகவும் தேய்த்து
திண்ணிய தவிடுமாவால் நிறக்கவே தாவிவைத்து
தண்ணெனக் கழுவி நல்ல சந்தணம் பூசத்தீரும்."

இம்மாதிரி தினந்தோறும் நமது முன்னோர்கள் செய்து வந்திருக்கிறார்கள் அதேபோல் இப்போதும் செய்தல்வேண்டும்

நெய்யுண்ணார்:— சாப்பாட்டின் போது நல்ல ஆவின் நெய்யை உருக்கி உபயோகிக்கவும். 'நீரைச் சுருக்கி, மோரைப் பெருக்கி நெய்யை உருக்கி உபயோகிக்க வேண்டும்'' என்பதுபழமொழி

மதியந்தனை பாரார்:— தினந்தோறும் சந்திர தரிசனம் செய்தல் வேண்டும். அதாவது சந்திரனை நன்றாக ஊன்றிக்கவனித்தல் வேண்டும். ஏனெனில் சந்திரகிரணத்தில் அம்ருதம் இருக்கின்றது. சேகைய புட்களான, ஆகாயத்திலேயே எப்போதும் சஞ்சாரம் செய்யும் சகோர முதலான பக்ஷிகள் இந்த சந்திரனிடத்திலுள்ள அம்ருததாரையைப் பருகுகின்றன. மேலும், குழந்தைகளுக்குபால் சாதம் நிலவில்வைத்துக் கொண்டு ஊட்டுவது பிசகு, ஏனென்றால் ஆவின் பாலிலுள்ள அம்ருதத்தை சந்திரன் ஆகர்ஷித்து, பாலை சக்கையாக செய்து விடுகிறான் என்பதாக கருத்து.

பால் வார்த்துண்ணார்:— தினந்தோறும் இரவில் பால் சேர்த்து சாதம் சாப்பிட வேண்டும். அவ்வாறு செய்யாமல் படுக்கைக்குச்செல்லுமுன் பருகுவது உசிதமல்ல. பலவித ஔஷதிகளின் சத்துகளடங்கிய ஆட்டுப்பாலை உபயோகிப்பது நலம்.

பல்தேயார்:— தினமும் விடியற்காலையில் பற்களை சுத்தம் செய்யவேண்டும் இதற்கு கீழ்கண்ட குச்சிகளில் ஏதேனும் ஒன்றை சுத்தமாக நுனியில் நசுக்கி பல் துலக்கல் வேண்டும். அவையாவன: எருக்கு, ஆலவிழுது,

கருங்காலி, புங்கு, வேம்பு, முதலியவைகள்.

"மேல் கண்டவாறு எவர்கள் நடக்கவில்லையோ அவர்கள் கண் நோய்களினால் கவர்ந்து கஷ்டப்படுவர். இதை நாங்கள் சொல்ல கடைப்பட்டவர்கள்" என்று அகஸ்தியர் போன்ற ரிஷிகள் கூறி இருக்கின்றார்கள். இதன் முழுவிபரங்களையும் "அகஸ்தியர் நயனவிதி 500ல்" காணலாம்.

உ

ஓம்

ஆத்ம குருவே நம.

ஆத்மானந்த நிலயம், தஞ்சாவூர்.

தலைவர் என் எல். அய்யர்.

"அகப்புரட்சி."

இன்று உலகமுழுவதும் நாம் காண்பது ராஜீய, வியாபார மேன்மைக்காக பாடுபடும் முயற்சிகளே யாகும். ஒவ்வொரு தேசமும் மற்றதேசங்களில், பலவித தந்திரங்களால் தன் ஆதிக்கங்களை விருத்திசெய்துகொண்டு, தங்கள் வியாபாரத்தை அதிகரித்துக் கொள்ள யத்தனிக்கிறது.

பல ஆண்டுளாக நாமும் அந்நிய ஆட்சியின் ஆதிக்கத்தில் நமது கலாசாரத்தையும், குலாசாரத்தையும் இழந்து நமது லக்ஷியங்களையும் மறந்து மற்ற தேசத்தார்களைப் போலவே இருந்தோம். சரித்திரவாயிலாக அறியப்படும் நமது முன்னோர்களின் மேன்மை எதை அடிப்படையாகக் கொண்டது என்பதை ஆராய்ந்தால், அவர்களுடைய லக்ஷியம், "ஆத்ம சுதந்திரமே" என்பது நன்குவிளங்கும். அந்த "ஆத்மீக சுதந்திரம்" யாது? என்பதை இங்கு சிறிது ஆராய்வோம்.

"அரிதரிது மானிடராய் பிறத்தலரிது" என்று ஒருதமிழ்ப்பெரியார் சொல்லியிருப்பதால், இந்த மானிடதேகத்தின் கண் உள்ள அருமையான தத்துவங்கள் யாவை? மனித உடலில் ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து அந்தக்கரணம் நான்கு ஆகிய பதிநான்குமே இயங்குகின்றன. அவையாவும் ஜாக்ரதவஸ்தையில் இயங்குவதைப்பார்க்கிறோம். சுவப்பனத்தில் ஞானேந்திரிய,

கர்மேந்திரியங்களாகிய பத்தும் லயப்படுவதை தினமும் அநுபவிக்கிறோம். இந்த அந்தக்கரணங்களும் தூக்கத்தில் லயப்படுகின்றன. ஆனால் ஜாக்ரத்திலும், சுவப்பனத்திலும் சுகதுக்கங்களை அநுபவிக்கிறோம். தூக்கத்திலோ சுகத்தையே அநுபவிக்கிறோம். யோகியாயினும் சரி, பக்தனாயினும் சரி, ஞானியாயினும் சரி, மூடனாயினும் சரி, தூக்கத்தில் சுகமே காண்கின்றான்.

ஒவ்வொரு தினமும் மானிடதேகத்தில், விழிப்பு, கனவு, தூக்கம் என்ற இந்த மூன்று(**அவஸ்தைகள்**)நிலைகள் நிகழ்கின்றன. தினம்தினம் இந்த பதிநான்கு கருவிகரணங்களும் தன் சிறுமையை நிரூபிக்கின்றன. அப்படியிருக்க இதில் எதை நம்பி நமது ஆத்மலக்ஷியத்தை அடைவது? இது இயலாத காரியமாகவே படுகிறது. ஆனாலும் தூக்கத்தில் இயலாவது யாது? என்று ஆராய்ந்தால் "பிராணனே" என்பது விளங்கும். மேலும் இந்த பிராணன் இந்தமூன்று அவஸ்தைகளிலும் தொழில்படுவதை அறிகிறோம். பிறந்தது முதல் இறப்பதுவரை இந்தப் பிராணனே உற்றதுணைவனாய் இருக்கிறான். மேலும், சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாய் இந்த ஜீவனுக்கு அதன் புண்ணிய பாவத்திற்கு தகுந்த பிறவிகளை கொடுத்துவருகிறான். அணுவாகிய இந்த ஜீவனை அநேக கோடி ஜன்மங்களிலும் தொடர்ந்துவந்து இந்த ஜன்மத்தில், இம்மானிட சரீரத்தில் இயங்குகிறான். அப்படிப்பட்ட பிராணனை இந்தசரீரத்திலேயே ப்ரதிஷ்டை செய்வோம்! அவனையே ப்ரத்யக் ப்ரம்மமாக உபாசிப்போம் சிரஞ்சீவிகளாக வாழ்வோம்! ஆத்மலக்ஷியத்தை அடைந்து நித்தியானந்த பேரின்பசுகத்தை அடைவோம்.

"AFTER-LIFE INSURANCE."

E. V. Gopalan, Tanjore.

The pamphlet No 13 issued by the Veda Dharma paripalana Sabha explains what 'Papa' and 'Punya' mean as contemplated by the Rishis of yore and how such a knowledge of these is essential to everyone who calls himself a Hindu as well as to any human being in this world who ever yearns for happiness but rarely works for it. Ways and means are detailed in Dharmasastras and nothing is enforced that is beyond one's means or

capacity As a true friend, as a wise counsellor and as a practical guide, Sastras proceed to initiate us into Dharmic life, while yet a child and carry us on step by step to achieve this supreme ambition of man through the life's journey which is generally meandering and bewildering and at times full of perils too. Such is the love of our Creator and his prophets that followed him.

2 The most precious gift endowed on man as his crowning act of creation is the sublime power to help him *think, speak and act* in his limited sphere of life. All that is expected of the man for this kindness of the Lord is but to recognise this gift as divine, to cherish it as a valuable treasure, to develop it by the right use as directed and to sublimate it by faithful service A single thought, kind and noble, if directly progressed to its kindred word and act is quite enough to strike the chord of happiness and to tune it for further resonance. Happiness is therefore not to be begged or purchased but to be achieved from within by practises as ordained in Sastras. We must learn and obey them. We do not learn what we do not practise. We cannot gain what we desire for life unless by righteous practices if Education can draw out powers from within to prepare life smooth and graceful, practices and powers to push it further even after death which does not mark the end of life. Death but ends the course of life here and directs its course beyond, unseen by the mortals.

3 From day to day, from the crawling childhood to the tottering dotage the life is assigned a course of constant practices to prepare us a smooth journey beyond. Each act, Kind and good is *a prudent premium but by* for future help and happiness on the lone journey beyond. A child may be set up to begin its education on the bed reck of Dharma and look up to Him for light and guidance He may be taught to say the holy names of God and repeat them each day He may do one good act a day and pursue it with love and reverence. He may save a pie each day and add more with a view to serving the poor and helpless in time. This will be the right hit and approach, for happiness here and elsewhere. Exercises of righteous practice will soon dive deep in flesh and blood. Life takes then a course full

1998/2

of learning produced by right conduct in such a way that it cannot help behaving rightly Learning becomes conduct and life, a well-woven conduct. The laws of Dharma and the master ensure us happiness here and beyond Dharma proclaims that happiness free from any tinge of sorrow or grief awaits those who set foot on the path of Dharma and that even little acts of kindness and the practices enjoined on man for his daily performances will be valued most by the Lord and credited *on his account in the Holy Bank of Dharma to be transformed in time to the needs of the new life after death by the Great Dispenser.* "After life insurance" is an unfailing "Divine Design of Service open to all at all times offering magnificent returns even for meagre premiums the attainment of happiness. lies in us. Rishis have shown us how, but we ourselves must individually do the karma that it requires

[N. B. Readers are requested to go through the Tamil pamphlet in full and enrich their knowledge]

தார்மிகச் செய்திகள்

நன் கொடை.

திருச்சி.- பலதர்ம கார்யங்களில் விசேஷமாக ஈடுபட்டு வரும், ரிடையர்ட் ரயில்வே இன்ஸ்பெக்டர் **ஸ்ரீ. சுப்பரத்னமய்யரவர்கள்** சென்றமார்கழிமீ 22௳ (6—1—48) செவ்வாய் கிழமையன்று ௸ யாருக்கு வெகுவிமரிசையாக நடந்தேறிய ஷஷ்டி அப்தபூர்த்தி சாந்திகாலத்தில் கும்பகோணம் **வேத தர்மசாஸ்திர பரிபாலன ஸபைக்கும்**, திருச்சி **வேத ஸம்ரக்ஷண ஸபைக்கும்** நன்கொடையளித்தார் என்பது மிகவும் போற்றத்தக்கது. இதை மற்ற ஆஸ்திக பிரபுக்களும் பின்பற்றுவார்களா?

கோபிசெட்டிப் பாளையம் அத்வைத ஸபை:—

சென்ற மார்கழிமீ 16௳ முதல் 20௳ வரை ௸ யூரில் 2வது அத்வைத ஸபை, ப்ரஹ்ம வித்யாப்ரசாரப்ரவீண, மஹாமஹோபதேசக, தர்மக்ஞ, ப்ரம்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திரிகளவர்கள் தலைமையில் **அத்வைத ஸபை** வெகுவிமரிசையாக நடந்தேறியது. பல பிரஸித்த வித்வான்கள் உபன்யாஸங்களிலும், வாக்யார்த்தங்களிலும் கலந்து கொண்டார்கள். ௸ விஷயத்தில் கண்டனூர் A. V. சேஷகிரிசாஸ்திரிகளவர்களுடைய சிரத்தையும், விடா முயற்சியும் கொண்டாடத்தக்கது.

SELF CONQUEST.

(SWAMI SIVANANDA.)

Just as there is severe labour pains before the birth of the child, so also there is pain now in the world for the birth of a new order, a new era, a new culture and a new civilization.

The universe is an aspect of the Lord because its creation, preservation and destruction proceed from Him. Gold ear-rings, armlets, etc, are nothing but gold. So also the world of names and forms is nothing but the Lord. If you remember this constantly you will have a new angle of vision. You will be freed from attachment and hatred. You will attain Self realization through the worship of the Virat

Strive ceaselessly to live in God through Japa, Kirtan, Service of the needy and meditation. Then alone you will be able to conquer Time and Death

Become a Hero. Conquer the formidable foe, the turbulent mind. Self-conquest is more than many a martyrdom. The inner war against the evil thoughts, evil Vasanas, cravings and evil Samskaras or impressions is more formidable than the external world-war War against the mind and the senses is indeed more terrible than this outer warfare.

Realize your unity with the human beings, animals, plants and rocks Mix with all. Unite with all. Cultivate equal vision and universal brotherhood. You will soon attain the '*Summum bonum*' of life.

Taste the immortal sweetness of the beautiful life in the self within by annihilating the mind. Live in the Atma and attain the blessed Immortal State. Meditate and reach the deeper depths of eternal life, the higher heights of divine glory and eventually attain the full glory of union with the Supreme Self.

May God give you a clear understanding and spiritual strength to remove all defects May you all possess a clear, subtle understanding and purity to know your defects. May you all rest in that stupendous ocean of bliss after annihilating all negative qualities, enemies of knowledge and peace.

ஸம்ஸ்கிருத ஸம்பாஷணை,

V. வைத்யநாதசாஸ்திரிகள். — தஞ்சை.

र.घव: — अये कुतस्त्वमागच्छसि? எங்கிருந்து நீ வருகிறாய்?

गौतमः — चेन्ननगरात् சென்னை நகரத்திலிருந்து

रा कुत्र गन्तासि? எங்கு செல்லுகிறாய்?
गौ यामि मथुराम् மதுரைக்குச் செல்லுகிறேன்

रा कस्तव अभिजनः? நீ பிறந்த ஊர் எது?

गौ मथुरैव மதுரைதான்.

रा किं तव नाम? உன் பெயர் என்ன?
गौ मां गौतम इत्याह्वयन्ति என்னை "கௌதமன்" என்று அழைக்கிறார்கள்.

रा कदा त्वं चेन्ननगरमगच्छः? எப்பொழுது சென்னை நகரத்திற்குச்சென்றாய்?

गौ अतीते सप्ताहे சென்ற வாரத்தில்

रा कति ते भ्रातरः உன் ஸகோதரர்கள் எத்தனைபேர்?

गौ चत्वारः நால்வர்கள்

रा क्व ते निवसन्ति? எங்கு அவர்கள் வசிக்கிறார்கள்?
गौ एकः चेन्ननगरे, ஒருவர் சென்னை நகரத்தில்
अपरे मथुरायाम மற்றவர்கள் மதுரையில்

रा किं ते संस्कृत भाषायां परिचयः अस्ति?
ஸம்ஸ்கிருதபாஷையில்உனக்குப் பயிற்சிஉண்டா?

गौ सर्वदा तामेव पठन्नस्मि
எப்பொழுதும் அந்த பாஷையையேபடித்து வருகிறேன்.

பாரதி விஜயம்.

(ஸ்வாமிநாத ஆத்ரேயன்)

கடைசி நாள். மண்டன மிச்ரர் அநுஷ்டானம் செய்து கொண்டிருக்கிறார். சங்கரர் வாசலில் காத்து நிற்கின்றார். வாதத்தின் பொருட்டு. பாரதி - சங்கரர் வந்திருப்பதை கவனித்து பர்த்தாவிடம் தெரிவிக்கிறாள்.

மண்:- முண்டிக்கேது அநுஷ்டானம்? அதற்குள் வந்து விட்டார்போல் இருக்கிறது?

பாரதி:- நல்லவேளையாக வாதகாலத்தில் இவ்வித அவச்சொற்கள் வாராமல் இருக்கின்றனவே.

மண்:- சிற்சில சமயம் அவ்விதம் வந்துவிடும்போல் இருக்கிறது. பாரேன். நேற்று வாதத்தில் அவர் சொன்ன கூற்றுக்களை —— "உலகம் அநித்யமாம். ஸகலமும் அநித்யமாம் ஆனால் அதன் அநுபவம் அவச்யமாம். எவ்விதம்? கருமுகில் பாய்ந்த ஆகாய வெளியில் பிரம்ம ஸ்வரூபத்தைக் காணமுடியுமாம். பிரம்மம் என்ன களங்கமுற்று விட்டதா?

பாரதி:- ஸ்வாமி தாங்கள் சொல்வது என்னவோ போல் இருக்கிறது அவர் தன் அபிப்ராயத்தைத்தான் நன்றாக விளக்கிச் சொன்னாரே. உண்மை ஒளி கண்களில் வீசும்பொழுது அநித்யமான உலகத்தை அநுபவிக்கும் விதம் வேறு. மோஹமாயையால் கண் இருண்ட பொழுது உலகத்தை அநுபவிக்கும் விதம் வேறு. நடிகர்கள் பாத்திரங்களுக்கேற்ப நடிக்கும்பொழுது சுக துக்கங்களை அநுபவிப்பதெப்படி? கதாபாத்திரங்கள் அதே சுக துக்கங்களை அநுபவித்ததெவ்விதம்? சபையிலுள்ளோர் பாத்திரங்களின் சுகத்தில் ஆனந்தத்தையும் துக்கத்தில் வருத்தத்தையும் அநுபவித்தாலும் அந்த அநுபவம் ஒரே ஆனந்தமயமாகத் தோன்றுவது போல்தான் பிரம்மானந்தம் என்று சொன்னாரே. நடிப்பிலேயே ஆனந்தத்தை அநுபவிப்பது போல்தான் அநித்யமான உலகத்தைத் தனித்து நின்று நோக்குவதும் என்றாரே. இதில் ஒன்றும் தவறு தெரியவில்லையே.

மண்:- நன்று! பாரதி! நன்று! கொஞ்சம்கூடத் தவறாமல் அவர் சொன்னதை அறிந்துகொண்டு விட்டாயே. இருந்தாலும் சுத்தமாக கவனிக்கும் பொழுது அவர் சொல்வதெல்லாம் மாயமாலமாகத் தோன்றுகிறது.

பாரதி:- என்னவோ! ஸ்வாமி! பரம்பொருளின் விவகாரமே மாயமாலமென்று தெரியும்பொழுது அதை விளக்கும்

சொற்களும் மாயமாலமாகத் தோன்றுவதில் வியப்பென்ன? இருந்தாலும் அதற்கேற்ற பண்புடை மனதுடன் அறிந்து கொண்டால் அதன் தத்துவம் விளங்காமலா போய்விடும்?

மண்:- பாரதி! ஆனால் மத்யஸ்த மனதுடன் வாதத்தை கவனிக்கிறாய் என்று தோன்றவில்லை.

பாரதி:- ஸ்வாமி! மன்னிக்கவேண்டும். பதியிடம் கொஞ்சம் பட்சபாதம் இல்லாமல் இருக்கமுடியுமா? வாதவெறியிலும் தன் நெறி தவறாத அவரிடம் ... .

மண்:- உனக்கு கௌரவபுத்தி உண்டாகிவிட்டதல்லவா?

பாரதி:- அதுமாத்திரமல்ல கொஞ்சம் கொஞ்சம் பொறுமையும் ஏற்படுகிறது

மண்:- பாரதி! உன்னை அறிந்துகொண்டேன்.

பாரதி:- ஸ்வாமி! மன்னிக்கவேண்டும். இவ்வளவு கர்மடரான தங்களுக்கு சேவை புரிந்து பக்குவம் அடைந்த என் மனதில் களங்கத்திற்கு இடமில்லை ஆம், பெண்மை உணர்ச்சியே அற்றுவிட்டது. சேவை உணர்ச்சிதான் மிகுதி. இவ்விதம் உருவழிந்த என் மனது புது உரு எடுக்க ஆரம்பித்திருக்கிறது.

மண்:- தெரிகிறது தனித்து நின்று நோக்கும் உரிமை பெற்றாயல்லவா? என் சுவடைத்தொடருவதை விட்டு இன்று நீ முன் சென்று முட்பொருக்க முற்படுகிறாய். அதுவும் எனக்குச் சம்மதமே. ஆனால் தன்னை நீ காத்துக்கொள்வாயா?

பாரதி:- என்னைக்காத்துக் கொள்வதுதானே எனக்கு லட்சியம்?

மண்:- என்னையும் காப்பதுதான். சரிவாதத்திற்கு ....

பாரதி:- பிரதிவாதியைக் கூப்பிடட்டுமா?

மண்:- கூப்பிடு.

(சங்கரர் வருகிறார். மண்டனர் மனைவியுடன் அவரை வந்தனம் செய்து வரவேற்று ஆஸனம் அளிக்கிறார்.)

சங்:- நாராயண! வாதம் ஆரம்பிக்கலாமா?

பாரதி:- ஆஹா! ஆரம்பிக்கலாம்.

சங்:- இன்று எந்த விஷயம் வாதத்திற்கு எடுத்துக்கொள்வோம்?

மண்:- (மௌனம்)

சங்:- என்ன மௌனமாக இருக்கிறீர்கள்? வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட தங்களுக்கு என் மதத்தை ஒத்துக் கொள்வதைத்தவிர வேறு வழியில்லையல்லவா?

மண்:- (மௌனம்.)

சங்:- இப்பொழுதாவது தங்கள் தோல்வியையும் நான் ஸர்வஜ்ஞன் என்பதையும் ஒத்துக்கொள்வீர்களா?

பாரதி:- அது முடியாது!

மண்:- (ஆச்சரியத்துடன் பாரதியைப்பார்க்கிறார்)

சங்:- ஏனம்மா?

பாரதி:- வாதம் இன்னும் முடியவில்லை.

சங்:- ஏன்?

பாரதி:- நேற்று வாதமுடிவென்ன?

மண்:- மறுபிறப்பு வினைப்பயனைப்பொருத்தது என்று.

சங்:- அப்படியானால் பெற்றோருக்கு அவ்விதமகவுப் பிறவியில் யாது பொருப்பு?

மண்:- அதுவும் வினைப்பயன்தான்.

சங்:- அல்ல. கடவுளின் விருப்பம்.

பாரதி:- கேள்விக்கு இருவரும் பதில் சொல்லவில்லை.
பெற்றோருக்கு மகவு பிறப்பதில் யாது பொருப்பு?

மண்:- அதற்குத்தான் பதில் சொன்னேன்.

சங்:- நானும்தான்.

பாரதி:- அவை பதிலாகா. ஈச்வரன் விருப்பமோ வினைப்பயனோ காரணமானால் ஆண் பெண் பிணைப்புக்கு காந்த சக்தி ஒன்று தேவையில்லை.

சங்:- என்ன?

பாரதி:- ஆமாம். தாங்கள் இருவர் சொல்லும் - வினைப் பயனும் ஈச்வர ஸங்கற்பமும் - "தற்செயல்" என்ற சொல்லில் அடங்கிவிடலாமல்லவா?

சங்:-
மண்:- } எப்படி?

பாரதி:- தற்செயலாக இயலும் காரியத்திற்கு ஒருவர் வினைப்பயனைக்காரணமாகச் சொல்கிறீர்கள். மற்றவர் ஈசுவர ஸங்கல்பத்தைக் காரணமாகச்சொல்கிறீர்கள்.

சங்:- அப்படி ஆகாது. அவன் (விருப்பம்) இன்றி ஓரணுவும் அசையாது.

மண்:- ஆம். வினையின்றி பயன் ஏது?

பாரதி:- அது இரண்டும் சிற்றறிவுக்கு எட்டாதவை தானே.

சங்:-
மண்:- } ஆம்.

பாரதி:- அந்தச்சிற்றறிவுக்கு எட்டாத காரணத்தைத்தான் நான் தற்செயல் என்கிறேன்.

சங்:- வாதத்தின் சௌகரியத்தின் பொருட்டுத்தானே?

பாரதி:- அல்ல. உங்கள் இருவர் கட்சியும் தீரும் வரையில் இருவருக்கும் பொதுவான உண்மை இது. அதில் ஒன்றும் ஆட்சேபமில்லையே.

சங்:- சரி அதனால் ....

பாரதி:- ஆண் பெண் பிணைப்பு ஏற்படுவதில். காந்த சக்தியின்றி - தற்செயலாக - ஏற்படுவதில்லை.

சங்:- அல்ல. வாதத்தில் வழிதவறிகடத்திவிட்டாய். தற் செயல் வழியைவிட்டு திரும்பு.

மண்:- ஆம். வினைப்பயன் வழிக்குவர வினைப்பயனால்தான் ஆணும் பெண்ணும் பிணைபடுகிறார்கள்.

சங்:- அல்ல. ஈச்வர ஸங்கற்பம் இருவர் மனதிலும் புகுந்து ஒருவருக்கொருவரை இணைக்கிறது

பாரதி:- பல்லவியை விட்டு விட்டு நான் எடுத்த அடியை கவனிக்கவேண்டும் பிறக்கிறான். இறக்கிறான். வாழ்கிறான் வீழ் கிறான். இவை மனித சக்தியை மீறி நிற்கின்றன. இவைகளுக் குக்காரணமாக நீங்கள் ஒவ்வொன்று சொல்கிறீர்கள். நான் தற் செயல் என்கிறேன்

சங்:- அதுமட்டுமல்ல. மனிதசக்தியை மீறியவைகளுக்கு எப்படி ஈச்வர ஸங்கல்பம் ....

மண்:- வினைப்பயன் ....

பாரதி:- இருக்கட்டும் தற்செயல்.

சங்:- ஆம். அதுகாரணமோ அப்படியே மனித சக்திக்கு உட்பட்டவைகளாகத் தோன்றும் காரியங்களுக்கும்.

பாரதி:- தற்செயல் காரணம். அதுதானே?

சங்:-
மண்:- } ஆமாம்.

பாரதி:- அதுவே போதுமே! காந்த சக்தி ஒன்று வேண் டாமே என்று கேட்கிறேன்.

சங்:- வேண்டாமே?

பாரதி:- வேண்டும்.

சங்:- எப்படி?

பாரதி: முந்தாநாள் வாதத்தில் பிரம்மஞானிக்கு ஈச்வர ஸங்கற்பம்கூட ஒதுங்கிவிடுகிறது. அவன் ஸ்வதந்திரன் ஆகிறான் என்று முடிவுகட்டினீர்களல்லவா? அப்படியானால் தங்களால் ஒரு பெண்ணை ஆகர்ஷிக்க முடியுமா?

சங்:- ஆகர்ஷிக்கலாம்.

பாரதி:- செய்து பாருங்கள்

சங்:- எனக்கு விருப்பமில்லை.

பாரதி:- வாதத்தில் வெற்றியும், தோல்வியும் அதைப் பொருத்தது.

சங்-: எப்படி?

பாரதி-: தங்களால் முடியாது என்கிறேன். அதைத் தாங்கள் அறியவில்லை. இந்த அறியாமையுடன் தங்களை எப்படி ஸர்வஜ்ஞர் என்று எப்படி ஒத்துக்கொள்கிறது?

சங்-: என்ன? முடியாதென்பதற்குக் காரணம்?

பாரதி-: எந்தப்பெண்ணும் தங்களை அந்தக்காந்த சக்தியுடன் பார்க்கமுடியாது.

சங்-: ஏன்?

பாரதி-: அப்படிப்பார்த்தால் தங்கள் சித்தாந்தத்திற்கே விரோதம். உங்கள் தரிசனம் எந்தப் பெண்ணுக்காவது அந்த உணர்ச்சியை எழுப்பினுல் அது உங்கள் ஞான நிஷ்டையில் குறை காண்பிக்கும்

சங்-: அப்படியானல் பிரம்ம ஞானிகளான வியாஸ பகவான் முதலானோர்கள் இல்லறத்தை அனுபவிக்கவில்லையா?

பாரதி-: இல்லறம்தான். நீங்கள் சொல்லும் இல்லறத்தில் பதியின் பரிவுக்கும் உத்திரவுக்கும் பாத்திரமானவள் ஸ்திரீ. அந்த ஸ்திரீ விஷயத்தில் உங்கள் காந்தசக்தி தேவையில்லை. அந்த ஸ்த்ரீ தன் பெண்மையை அறவே ஒழித்து அடிமையாகி விடுகிருள்.

சங்-: அவ்வளவுதானே. அதுதானே ஸ்திரீயின் தர்மம். அதன்படி காந்த சக்தியே தேவை இல்லை என்று ஆகிவிடவில்லையா?

பாரதி:- ஆம் அப்படித்தான். ஆனல் ஆகர்ஷணசக்தி அழியாத-பெண்மையின் கிளர்ச்சி ஒடுங்காத-பெண்ணுடன் கூடும் இல்லறத்தைப்பற்றி நான் பேசுகிறேன்.

சங்:- அப்படி ஒன்று தனியாக ஒத்துக்கொள்வதில் விசேட மென்ன?

(தொடரும்)

Printed by V. S. Rajagopalan, at The Mannargudi Press Ltd.
1, Kasukkarachetty Street, Mannargudi.
Edited & Published by R. Muthukrishna Sastrigal,
1835/3, West Main Street, Tanjore.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்திரம்.

(ப. து.) **हे नागारीवाहन** — கருடவாஹனனும்
सुधाब्धिनिवास — அமுதக்கடலில் வசிப்பவனும்
शौरे — வசுதேவன் புதல்வனுய் அவதரித்தவனும்
हे लक्ष्मीनृसिंह — ஓ நரசிங்கமூர்த்தியே
संसारसर्पघनवक्त्रभयोग्रतीव्रदंष्ट्राकरालविषदग्धविनष्टमूर्तेः — ஸம்ஸாரமாகிறஸர்ப்பத்தின் வாயிலுள்ள பயங்கரமாயும் உக்ரமாயும் தீக்ஷணமாயும் இருக்கிற விஷப்பற்களால் கடிபட்டு பொசுங்கிய தேஹத்தையுடைய
मे करावलम्बं देहि — எனக்கு கைப்பிடியைக்கொடுத்தருளவேண்டும்.

(க. து.) ஸம்ஸாரத்தை ஸர்ப்பமாக வர்ணிப்பது வழக்கம்.

संसारसर्पदष्टानां जन्तूनामविवेकिनाम् ।
चन्द्रशेखरपादाब्जस्मरणं परमौषधम् ॥

என்றது முதலானவையே சாக்ஷி. அவ்விதப்பாம்பு கடித்து மூர்ச்சித்திருக்கும் என்னை கருடவாஹனனுயும், அமுதக்கடலில் துயின்றும், 'கிருஷ்ணுவதாரம்' செய்து காளியமர்த்தனம் முதலியவைகளால், விஷத்தைப் போக்கவல்ல நீ கை தூக்கிவிட்டு பிழைப்பிக்க வேணுமென்பது கருத்து. 7

संसारवृक्षमघबीजमनन्तकर्म
शाखाशतं करणपत्रमनङ्गपुष्पम् ।
आरुह्य दुःखफलितं पततो दयालो
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥

ஸம்ஸார விருக்ஷமகபீஜமநந்தகர்ம
சாகாசதம் கரணபத்ரமனங்கபுஷ்பம் ।
ஆருஹ்ய துக்கபலிதம் பததோ தயாளோ
லக்ஷ்மீந்ருஸிம்ஹ மமதேஹி கராவலம்பம் ॥ 8

(ப. ரை.) **दयालो** — தயை உள்ளவரான
हे लक्ष्मीनृसिंह — ஓ லக்ஷ்மீ நரசிங்கப் பெருமாளே
अघबीजम् — பாபமாகிறவிதையிலிருந்துமுளைத்ததாயும்
अनन्तकर्मशाखाशतम् — அளவற்ற நானுவிதகர்மங்கள் ஆகிறகிளைகளுள்ளதாயும்

करणपत्रम् .... இந்திரியங்களாகிற இலைகளையுடையதாயும்

अनङ्गपुष्पम् — காமனென்கிற புஷ்பத்தையுடையதாயும்

दुःखफलितम् — துக்கங்களாகிற பழங்களைப்பயப்பதாயுமிருக்கிற

संसारवृक्षम् — ஸம்ஸாரமாகிற மரத்தின்மேல்

आरुह्य — ஏறிவிட்டு

पततः — (தலைகீழாக) விழுகின்ற

मे करावलम्बं देहि — எனக்குகைப்பிடியைக்கொடுத்தருளும்.

(வி. ம்.) ஸம்ஸாரத்தை விருக்ஷமாகவர்ணிப்பது ஸஹஜம்
ऊर्ध्वमूलमवाक्शाखं — என்றது ஆரண்யம்
ऊर्ध्वमूलोऽवाक्शाखः — என்னும் கடவல்லி
ऊर्ध्वमूलमधः शाखमश्वत्थं प्राहुरव्ययम् — என்றது கீதை
एकायनोऽसौ द्विफलस्त्रिमूलः — என்கிறது பாகவதம்
காலத்தச்சன்வெட்டிமுறிக்கும்மரமென்றனார் அறிஞர். இங்கு ஸ்ரீஸ்வாமிகள் அதை ஓர் விஷவிருக்ஷமாக உருவகப்படுத்துகின்றார்:—
பாபத்திலிருந்து முளைத்ததாம் (புண்யமும்பாபத்திற்கு ஒப்பாகும்) பலவிதமான லௌகீக வைதீககர்மங்களே கிளைகளொப்பனவாம். பதினொரு இந்திரியங்களும் இலைகள்போலத்தளிர்க்கின்றனவாம். காமமே பூவிற்கொப்பாம். இதைக்கண்டு ஆசையால் ஏறினேன். துக்கங்களே பழுத்துதொங்குகின்றன. இறங்கமுயன்றேன். தவறி விழுந்து விட்டேன். கீழே நரகக்குழி. பரமதயாவான ஹே நரசிங்கமூர்த்தியே! தாமதியாது இச்சமயம்ஓடிவந்து என்னைத்தாங்கிக்காத்தருளவேண்டுமென்பது.

(கருத்து) 8

सम्सारसागरविशालकरालकाल
नक्रग्रहग्रसननिग्रहविग्रहस्य ।
व्यग्रस्य रागरसनोर्मिनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ ९ ॥

ஸம்ஸார ஸாகரவிசால கராலகால
நக்ரக்ரஹ க்ரஸன நிக்ரஹ விக்ரஹஸ்ய।
வ்யக்ரஸ்ய ராகரஸனோர்மி நிபீடிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ம மம தேஹி கராவலம்பம்॥ (9)

(ப. ரை.) **हे लक्ष्मीनृसिंह** — ஏ லக்ஷ்மீநரசிம்மனே!

संसारसागरविशालकराल — कालनक्रग्रहग्रसननिग्रहविग्रहस्य — ஸம்ஸாரமாகிற ஸாகரத்தில்விஸ்தாரமான காலமாகிற பயங்கரமான முதலையினது பிடியினாலும் விழுங்குவதாலும் அவஸ்தையை அடைந்த சரீரத்தையுடையவனும்

व्यग्रस्य — பலவிதமான கவலையுடையவனும்

रागरसनोर्मिनिपीडितस्य — நானாவித ரஸங்களால் நானாவிதமாகத் தோன்றும் நாக்கின் அவஸ்தாபேதங்களாகிற அலைகளால் அலைக்கப்படுகிறவனுமான

मे — எனக்கு

करावलम्बं — கைப்பிடியை

देहि — கொடுத்தருளுவீராக!

(க. து.) இச்சுலோகத்தில் ஸம்ஸாரத்தை ஸமுத்திரமாக உருவகப்படுத்துகிறார் (துக்கமாகிற ஜலமென்றும் பாவித்துக்கொள்ளலாம்.) அதில் காலனென்ற பெரிய முதலை பிடித்து விழுங்க ஆரம்பிக்கிறது. தாழம்பூவைப்போல் முதலையின் பற்கள் சில வெளிமுகமாயும் சில உள்முகமாயும் வளைந்து கூர்மையாயிருப்பதால் புகுந்தாலும் துன்பம் மீண்டாலும் துன்பமே. அச்சமயத்திலும் பாம்பின் வாயிலுள்ள தேரை, ஈயைப் பிடிப்பதுபோல் பலவித ஆசைகளில் மனது செல்லுகிறது. கஜேந்திரனை காத்ததுபோல் நீரே இத்தருணம் காத்தருள வேண்டும் என்பதாம். 9

சென்னை-600

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்தோத்திரம்.

संसार सागरनिमज्जनमुह्यमानम्
दीनंविलोक्य विभो करुणानिधे माम् ।
प्रह्लादखेदप॰ हारपरावतार
लक्ष्मीनृसिंह मम देहिकरावलम्बम् ॥ 10

ஸம்ஸாரசாகரநிமஜ்ஜனமுஹ்யமானம்
தீனம் விலோக்யவிபோ கருணாநிதே மாம் ।
ப்ரஹ்லாதகேத பரிஹார பராவதார
லக்ஷ்மீந்ருஸிம்ம மமதேஹி கராவலம்பம் ॥ 10

(ப. ரை.) हे करुणानिधे — கருணைக்கடலே

प्रह्लादखेद परिहारपरावतार — ப்ரஹ்லாதனுடைய கஷ்டங்களை விலக்குவதற்காகவே அவதரித்தவனே

विभो — ஸர்வ வல்லமையுள்ளவனே

संसार सागरनिमज्जन मुह्यमानम् — ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தில் முழுகி மயங்கிக்கிடக்கும்

दीनं — மிகவும் தீனனை

मां — என்னை

विलोक्य — (கடைக்கண்ணால்) பார்க்கவேண்டும்.

लक्ष्मीनृसिंह — அழகிய நரசிங்கரே

मम — எனக்கு

करावलम्बं — கைப்பிடியை

देहि .... கொடுத்தருளவேண்டும்.

(க. து) ஸம்ஸாரத்தில் மூழ்கிநயங்குமென்னை கடைக்கண்ணால் பார்த்துக் கைதூக்கிவிடவேண்டும், ப்ரஹ்லாதனைப் போல் பரிவுடன் ரக்ஷிக்கவேண்டுமென்பதாம் 10

संसारघोरगहने चरतोमुरारे
मारोग्रभीकरमृगप्रवरार्दितस्य ।
आर्तस्यमत्सरनिदाघनिपीडितस्य
लक्ष्मीनृसिंह मम देहि करावलम्बम् ॥ 11 ॥

அறிஞர்களின் ஆசி.

வெ. ராகவன் அவர்கள், எம். ஏ. பி. எச். டி.
யுனிவர்ஸிடி, சென்னை.

தாங்கள் அனுப்பிய ஹிதபாஷிணி 2 இதழ்கள் கிடைத்தன. நல்ல தொண்டு. தங்கள். முயற்சி பயன்பட்டு ஓங்கவேண்டுமென்று நான் கடவுளை பிரார்த்திக்கிறேன்.

வெ. ராகவன்.

*   *   *   *   *

தர்மரக்ஷாமணி **K. பாலசுப்ரமணிய அய்யரவர்கள்:**
B. A. B. L. அட்வகேட், சென்னை.

தாங்கள் ஆசிரியராயிருந்துவெளிப்படுத்தும் 'ஹிதபாஷிணீ' என்ற பத்திரிகையை அன்புடன் அனுப்பிவைத்ததை நான் பார்த்து ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். அதற்கு என்னுடைய நன்றியையும் தெரிவிக்கிறேன். இம்மாதிரியாக தர்மபிரசாரம் செய்யவேண்டிய நோக்கமுள்ள பத்திரிகைகள் இக்காலத்தில் ரொம்பவும் அவசியமென்பதில் சந்தேஹமில்லை.

கி. பாலஸுப்பிரமணியன்.

*   *   *   *   *

வரப்பெற்றோம்

ரா. சுப்பரத்னமய்யர், 50, வடக்குத்தெரு மலைக்கோட்டை அவர்களால் வெளியிடப்பட்ட (1) **ஸ்தோத்திரத்ரவலி**(விலை அணா 6) (2) **ப்ராத:ஸ்மரணம்** (விலை அணா 2½) என்ற இரண்டு புத்தகங்களும் நமது பார்வைக்கு வந்திருக்கின்றன. முதல் புத்தகத்தில் தமிழ் அர்த்தத்துடன் கூடிய பல அரிய ஸ்தோத்ரங்களும், இரண்டாவது புத்தகத்தில் காலையில் எழுந்திருந்தவுடன் சொல்லவேண்டிய சில ஸ்தோத்திரங்களும் (அர்த்தத்துடன்) அடங்கியிருக்கின்றன. இரண்டிலும் மூலம், தேவநாகர எழுத்திலும், தமிழ் எழுத்திலும், அச்சிடப்பட்டிருக்கிறது. புத்தகங்கள் நன்முக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஹிந்து குடும்பத்திலும் மேற்படி 2 புத்தகங்களும் அவசியமிருக்கவேண்டும்.

ஆசிரியர்.

Review of Hithabhashini by the Hindu, dated 4th Jan. 1948.

The "do's" and "don'ts" of our moral code are not very well known to a large number of even *Asthikas* amongst us because of their lack of adequate knowledge of the Sanskrit language in which they have been laid down. The aim of this new monthly is to render these instructions, both explicit and implied in our classics, into Tamil, so as to be readily available to the seekers. In doing so, it will take care not to force the impracticable and the outmoded on the readers, but to suit the instructions to the needs of the day. As is to be expected, the Ramayana is largely drawn upon to supply the background to the contents of the journal. Mr. K Vasudeva Sastrigal writing on "Yuga Dharma" points out that when all our religious and spiritual practices are fast falling out of use, the only Dharma that can be pursued by all to-day is that of "Dana" and everyone should try to supply the needs of our less fortunate brethren to the best of one's ability. Dr S. Venkatarajan's health hints are not out of place in this journal inasmuch as our ancients have emphasised the value of a healthy life as the best means to attaining spiritual ends. The journal deserves support at the hands of all *Asthikas*.

எமது பிரத்யேகமானவை

1 **ஜீவநீ:-**
கர்ப்பிணிகளுக்குச் சிறந்த டானிக் 16 அவுன்ஸ் ரூ. 3-4-0

2 **ஸௌபாக்கிய ரஸாயனம்**
பிரஸவித்தவர்களுக்கு சிறந்த ரஸாயனம் 24 தோலா ரூ. 3-8-0

3 **பயஸ்யா**
தாய்ப்பாலை வளர்க்கும் உத்தம ரஸாயனம் ,, ரூ. 3-4-0

தபால், பாக்கிங் செலவு தனி.

தயாரிப்பவர்:-

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்.
தென்னூர்ரோடு திருச்சினப்பள்ளி.
தந்தி விலாசம்:- "ATREYA."

நவக்கிழி, தாரை *முதலான சிகிச்சைகள் செய்து கொள்ள வசதியான* **ஆரோக்கிய சாலை** (Nursing Home) *அமையப்பெற்றது.*

ஸ்வான்தார்: **V. B. நடராஜ சாஸ்திரி.**
ஆயுர்வேதாசார்ய.